
# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி



சோர்வி லாது நாதன் செபித்ததும்
துன்ப நாடி சூழ வெடித்தது
வேர்வை யோடு இரத்தம் வடிந்தது
மேனி யெங்கும் செம்புனல் பாய்தது

-இயேசுகாவியம்-

மார்ச் - 2006

15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மார்ச்- 2006

மலர்-39 இதழ்-02

**ஆசிரியர்**
J.A.G. இரட்ணகுமார்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/ மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 15/=
ஆண்டு சந்தா : 250/=
ஆறுமாதச் சந்தா : 130/=
(தபாற்செலவு உட்பட)


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| மாற்றமும் மனமாற்றமும் | - | 02 |
| இலக்கிய மஞ்சரி | - | 04 |
| சிலுவையால்... | - | 05 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 10 |
| மாணவர் பக்கம் | - | 12 |
| ஈழத்தில் கத்தோலிக்கத்... | - | 13 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 17 |
| மனக்கோலம் | - | 19 |
| நூற்றாண்டு நினைவு... | - | 22 |
| விவிலியம் கற்போம் | - | 23 |
| பரிசுப்போட்டி | - | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு



வருடா வருடம் வந்து கடந்து போகும்
ஒரு வழமையான நிகழ்ச்சியென
தபசு காலத்தை எடை போடக்கூடாது, அல்லது
தபசு காலத்தை ஒரு துயரத்தின் காலமாகவோ
சோகத்தின் காலமாகவோ கணக்கிடவும் முடியாது
பதிலாக இது விசுவாச வாழ்வில் ஆர்வமுள்ள காலமாகவும்,
ஆசீர்வாதத்தின் காலமாகவும் அமைந்துள்ளது.
புதிய கண்ணோட்டத்தோடு வாழ்வைப் புதியதாக்கி
மனமாற்றம் பெற்று அக்களிக்கும் அகமகிழும்
காலமாக இதை கருத்தில் கொள்ள வேண்டும்.
இக்காலத்தில் உடைந்துபோன
இறை உறவுகளும், சகோதர உறவுகளும்
மீண்டும் புதியதாய் உருவாக்கப்பட வேண்டும்.
மன்னிப்புகளும், விட்டுக் கொடுப்புகளும்
வாழ்க்கையில் இடம்பெற வேண்டும்.
அனாதைகளுக்கு ஆதரவும்,
பசித்திருப்போருக்கு பகிர்ந்தளிப்புக்களும்
தனிமையில் வாடுவோருக்கு தோழமையும்
கொடுக்க முன்வரவேண்டும். சுருங்கக் கூறின்
உன்னால் பலர் வாழ்வு பெற வேண்டும்.
மனுமகன் .....(மாற்கு 10:45)
உன் வாழ்க்கைப் பலியாக்கப்பட வேண்டும்.
அந்த வாழ்க்கைப் பலியில் பலர்
பலன் பெற வேண்டும். உனது அர்ப்பணங்கள்
அடுத்தவரை கைதூக்கி விடவேண்டும்.
இந்த அர்ப்பண சிந்தையோடுதான்
நாட்டின் தலைவர்களும்,
கட்சியின் தலைவர்களும்,
நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும்
வேட்பாளர்களும் செயல்பட வேண்டும்.
நான், எனது அதிகாரம், என் கட்சி
எனக்கு ஏற்படும் நன்மை என
எண்ணிப் பார்க்காமல் கட்சிகளைக் கடந்து,
அதிகார வலைக்குள் சிக்காமல்
பணியாற்றவே வந்தேன் என்ற
பரந்த மனப்பான்மையோடு பணியாற்ற
தலைவர்கள் முன்வரவேண்டும்;
அவர்கள் மனம் மாற வேண்டும்.
இம் மனமாற்றம் அவர்களுக்கு மட்டுமல்ல
இறைவனைத் தேடும் இறையடியார்கள்
அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகும்.
மலையளவு மனம்மாற
வேண்டுமென முயற்சிக்காதே
மாறாக கடுகளவு மனம் மாறினாலே போதும்.
அந்த மனமாற்றத்துக்கு ஆதாரமாக
நற்செய்தியை வாசி!
நற்செய்தியை நம்பு!
நற்செய்தியின்படி நட!

-ஆசிரியர்



## இறைவாக்கு

இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது
மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்

- மாற்கு 1:15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமும் மன மாற்றமும்



வாழ்வின் எல்லாப் பொழுதுகளிலும் எம் வாழ்வு போற்றுதற்குரியதாய் இருப்பதில்லை. அநேகமான சந்தர்ப்பங்களில் இது எமக்குத் தெரியத்தான் செய்கிறது. உலகில் கெட்டவராய் வாழ்வதென்பது ஒருவருக்குரிய ஆசையாய் இருக்க முடியாது. எனவேதான் எம் வாழ்வு மாற்றப்பட வேண்டும், மாற்றமடைய வேண்டும் என்றெல்லாம் நாம் நிறையவே விரும்புகிறோம். இருந்தாலும் எவ் வளவுதான் நாம் முயன்று நின்றாலும் எம்மை மாற்றியமைத்துக் கொள்ள எம்மால் முடியாமல் போய்விடுகிறது.

நான் மாற வேண்டும், என் இயல்பில் நான் மாறவேண்டும், என் குணத்தில் நான் மாற வேண்டும், என் சிந்தனை, சொல், செயல் அனைத்திலுமே நான்மாற வேண்டும், மொத்தத்தில் என் வாழ்க்கை முறையே மாற வேண்டும் என்றெல்லாம் நாம் சிந்திக்கின்றோம், முயல்கின்றோம். அப்படியான மாற்றம் எம்முள் உருவாவதன் மூலம் பிறர் மட்டில் நான் காட்டும் கொடுமைகள், புரியும் தீங்குகள், இழைக்கும் துன்பங்கள் அகல வேண்டும். என்னால் மற்றவர்கள் - குறிப்பாக என் குடும்பத்தினர், நண்பர்கள், உற்றார் உறவினர், அயலவர் என்று என்னைச் சுற்றிலும் வாழ்கின்றவர்கள் என்னால், என்பொருட்டு, எனக்காகச் சிந்துகின்ற கண்ணீர் மறைய வேண்டும் என்று நாம் விரும்பாமலில்லை.. விரும்புகின்றோம், பல வேளைகளில் அதற்காக முயற்சியும் செய்திருக்கின்றோம்.

எண்ணற்ற சந்தர்ப்பங்களில் இதற்காக இறைவனை வேண்டவும் செய்திருக்கிறோம். எம்மை மாற்றியமைக்க அவரது அருளுதவியை கேட்டு நின்றிருக்கிறோம். "இறைவா நான் மாற வேண்டும்"! ஒரு கட்டத்தில் நாம் இறைவனது கரங்களில் எம்முடைய வேலையை தள்ளிவிடவும் செய்கிறோம். "நான் மாற வேண்டும்" என்ற பொறுப்புணர்வோடு கேட்ட நாம் பின்னர், "இறைவா என்னை மாற்றிவிடு.. என்னை மனிதனாக ஆக்கிவிடு" என்று நாம் செய்ய வேண்டிய வேலையை இறைவன் கையில் முழுமையாக ஒதுக்கி விடுகின்றோம். 'படைத்தவன் நீதானே பார்த்துக் கொள்' என்கிற மாதிரி எமது செயல் அமைந்து விடுகிறது இல்லையா?

இது வேடிக்கையாகவில்லை?..

இந்த மண்ணில் இறைவன் எம்மைப் படைக்கின்றபோது மனிதர்களாகத்தானே எம்மைப் படைத்தார். படைப்புக்கள் ஒவ்வொன்றையும் நல்லவையாகத்தானே அவர் கண்டார், மகிழ்ந்தார். அப்படி இருக்கத்தக்கதாக இந்த மண்ணில் என்ன நடந்தது? நடக்கிறது? ஆபேலைப் பார்த்துப் பொறாமைப்பட காயினுக்குச் சொல்லித்தந்தது யார்? அன்று முதல் இன்று வரையிலும் மண்ணில் நடக்கின்ற விபரீதங்களுக்கெல்லாம் யார் காரணம்? நாம்தானே?

நம்மால்தானே இங்கு தீங்கு இழைக்கப் படுகின்றது.. நம்மால் தானே வேதனை இங்கு உருவாக்கப்படுகிறது.. நாம்தானே கொடுமையை மண்ணில் விதைக்கின்றோம். இதனால் ஒன்று மட்டும் நிச்சயமாகிறது. திருடனாய்ப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பார்கள். "உன்னை நீ மாற்றிக்கொள். உலகில் ஒரு கெட்டவன் குறைந்தான் என எண்ணிக்கொள்" என்பதுபோல.

எம்மாலேயே தீமையை இந்த மண்ணில் ஒழிக்க முடியும், எம்மால் மட்டுமே துன்பத்தை இங்கு கருவறுக்கமுடியும். எம்மால் தான் எம்மை தீங்கு இழைப்பதினின்றும் தடுத்துக் கொள்ள முடியும்; விடுவித்துக் கொள்ள முடியும். வேதனைகள் சோதனைகளினின்றும் எம்மை மற்றவரல்ல மீட்பது, எம்மை நாமே மீட்டுக் கொள்ள வேண்டும்.

மாறவேண்டியவர்களாய் நாம் இருக்கத் தக்கதாக அதற்காக முயற்சியெடுக்க வேண்டியவர்களாய் நாம் இருக்கத்தக்கதாக.. கடவுளே என்னை மாற்றிவிடும் என்று முயற்சியைக் கடவுள் பக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்த்திவிட்டு, மாறுவதா இல்லையா என்ற முடிவை மட்டும் நம் கையில் வைத்திருப்பது அழகல்ல. கடவுள் முயற்சிக்கலாம் ஆனாலும் மாறுவதும் மாறாமலிருப்பதும் நாமல்லவா?

ஒரு தாய் தான் பெற்ற குழந்தையை மார்போடணைத்து அரவணைக்கவே செய்வாள், செய்கிறாள். அது தூய்மையாக இருக்க வேண்டும் என்றுதான் அவள் விரும்புகிறாள். ஆனாலும் அவளது பிடியினின்றும் திமிறிக்கொண்டும் புழுதியைத்தேடி அது விரைகிறது, அழுக்கு அடைகிறது.

எப்பொழுதும் முயற்சி நம் கையிலும், முடிவு ஆண்டவன் கையிலுமிருப்பதுதான் நல்லது. முயற்சி திருவினையாக்கும். 'மாந்தர் தம் உள்ளத்த னையதுயர்வு' என்ற வள்ளுவன் மொழிக்கேற்ப, எம் உள்ளத்தின் ஆழமான முயற்சிதான் எம்மை நல் மனிதர்களாக உயர்த்தி வைக்க வல்லது. எம் முயற்சியின் வல்லமை அல்லது வேகம் கண்டு இறைவன் எம்மை மாற்றியமைக்க அருள் தருவார் என்பது மட்டும் திண்ணம்!

- ஆனந்த A.G. இராஜேந்திரம்.

# தன் மகனுக்காக ஒரு தந்தை வேண்டுவது



**இறைவா!**

தன் பலவீனத்தை அறிந்து கொள்ளக்கூடிய பலம் வாய்ந்த ஒரு மகனை எனக்குத்தா. பயம் அவனை ஆட்கொள்ளும் போது துணிவோடு அவன் அதனை முகம் கொள்ளட்டும்.

தோல்வி அவனை அணுகினால் வளைந்து கொடுக்காத தற்பெருமையை அவனுக்குத்தாரும்.

வெற்றி அவனை அணுகும் போது அடக்கத்தை யும், தாழ்மையையும் அவனுக்குக் கொடும்.

முதுகெலும்பு இருக்க வேண்டிய இடத்திலே ஆசை எலும்பு அவனுக்கு இருக்க வேண்டாம்.

உம்மை அறிவதும் அவன் தன்னை அறிவதுமே அவனது அறிவின் அத்திவாரமாய் அமையட்டும். சுகமும் சொகுசுமான பாதையில் நீர் அவனை நடத்த வேண்டாம் கடினப்பாடும் அறை கூவலும் உந்தித்தள்ளும் பாதையில் அவன் ஏறுபோல் நடைபோடட்டும். அந்தப்பாதையில் புயல் அடித்தால் அவன் வீழ்ந்து போகாமல் காலூன்றி நிற்கட்டும்.. வீழ்ந்தவர்களைக் கண்டால் அவர்கள் மீது அவனுக்கு இரக்கம் பொங்கட்டும்.

**இறைவா!**

தெளிந்த உள்ளமும் உயர்ந்த இலட்சியமும் கொண்ட மகனை எனக்குத்தா.

மற்றவர்களை ஆளமுற்படுமுன்பு அவன் தன்னை ஆளப் பழகிக்கொள்ளட்டும்.

என் மகன் சிரிக்கப் பழகட்டும்; அதே வேளை அவனுக்கு அழவும் தெரிந்திருக்கட்டும்.

எதிர்காலத்தை அவன் நினைக்கட்டும். ஆனால், இறந்த காலத்தை அவன் மறக்க வேண்டாம்.

இதையெல்லாம் நீ அவனுக்குத் தந்த பிறகு கொஞ்சம் நகைச்சுவை உணர்வை அவனுக்கு ஊட்டிவிடு. எதையும் அவன் பெரிதாகக் கணக்கிடட்டும்; ஆனால் தன்னைமட்டும் பெரிதாகக் கணக்கெடுக்காமல் இருக்கட்டும்.

உயர்வின் எளிமையை, உண்மை ஞானத்தின் திறந்த மனப்பாங்கை, பலத்தின் சாந்தத்தை உணரும் மனத் தாழ்மையை அவனுக்குத் தாரும்.

அப்போது,

"நான் வாழ்ந்தது வீணாய்ப் போகவில்லை" என்று அவன் தகப்பனாகிய நான் நிம்மதியாய் முணுமுணுப்பேன்.

ஆமென்

—யாழ் ராதவல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய "ஈழத்து இலக்கியமும், வரலாறும்" என்னும் ஆய்வு நூலொன்று அண்மையில் பார்வைக்குக் கிடைத்தது. பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ஆவார். இந்நூலை 2004ல் குமரன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இப்பதிப்பகம் கொழும்பிலும், சென்னையிலும் இயங்குகின்றது. இப்புத்தகத்தில் பதினாறு கட்டுரைகள் உள்ளன.

'கோணேசர் கல்வெட்டு' என்னும் கட்டு ரையில் சில சுவையான விடயங்கள் காணப் படுகின்றன. இலங்கையின் மத்தியகாலப்பகுதியி லிருந்து காணப்படுகின்ற வழக்கொன்றுள்ளது. அதாவது சிலவகையான இலக்கியங்களைக் "கல்வெட்டு" என்று அழைப்பதாகும். வரலாற்று அம்சங்கள் பொருந்திய சிலவரலாற்று நூல்கள் "கல்வெட்டு" எனக்குறிப்பிடப்படும். அத்துடன் அந்தியேட்டிக்கிரியைகள் முடிந்தபின் சபையோர் முன்னிலையில் இறந்தவர்களைப் பற்றிப்பாடும் பாடல்களும் கல்வெட்டு எனக்கூறப்படும். சாசன வாசகங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த இலக்கியங்களையும் கல்வெட்டு எனக்குறிப்பிடும் வழக்கம் இலங்கையில் ஏற்பட்டிருந்தமைக்கு "கோணேசர் கல் வெட்டு" என்னும் நூல் ஓர் எடுத்துக் காட்டாகும் என பேராசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

"மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்" என்னும் கட்டுரையில் நல்ல பல தகவல்கள் உள்ளன. ஆரம்ப கால மட்டக்களப்பின் எல்லைகளாக வடக்கில் வெருகலாறும், தெற்கில் குமனையும், மேற்கில் அடர்த்தி யான காட்டினையும் கொண்டிருந்தது. எனினும் மட்டக் களப்பானது பல நிர்வாக அலகுகளாகக் காணப்பட்டு ள்ளது. கோறளைப்பற்று, வாகரை, மட்டக்களப்பு, மண்முனை, எருவில், போரதீவு, பழுகாமம், நாடுகாடு, சம்மாந்துறை, பாணமை என்னும் பிரிவுகளும் இருந்துள்ளன. அவற்றிலே 'வன்னியர்' என்னும் சிற்றரசர் ஆட்சி ஏற்பட்டிருந்தது. பரம்பரை வழியான இவ்வாட்சியாளர்கள் சுதந்திரமாக ஆட்சி புரிந்து வந்தாலும், பொலனறுவை, கோட்டை, கண்டி இராச்சியங்கள் பலமுற்று இருந்தபோது, அவற்றிற்குத் திறைசெலுத்தியும் வந்துள்ளார்கள்.

கண்டி மன்னனும், ஒல்லாந்தரும் செய்து கொண்ட உடன்படிக்கையொன்றின் மூலம் கி.பி. 1766ல் மட்டக்களப்பு தேசத்தின் எல்லாப்பிரிவுகள் மீதும் ஒல்லாந்தர் ஆட்சியதிகாரம் பெற்றுக் கொண் டனர். எனவே அது தனியொரு நிர்வாகப்பிரிவாக மாறிற்று. கி.பி. 1962ல் இலங்கையரசாங்கம் அம்மாவ ட்டத்தை இரு கூறாக்கி அம்பாறை எனப்படும் புதிய மாவட்டத்தை உண்டாக்கியது.

"மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தில்" மண் முனைக்குடியேற்றம், மாகோனும் வன்னிமைகளும், மாகோன் வகுத்த குடிப்பிரிவுகள் என்னும் உப தலைப்புகளில் ஏராளமானதகவல்கள் பாடல்களின் ஆதாரத்துடன் உள்ளன.

கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்னும் விடயங்கள்தவிர பின்வரும் தலைப்புக்களிலும் ஆய்வுகள் காணப்படுகின்றன. வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, நாடு காட்டுப் பரவணிக் கல் வெட்டு கைலாசபுராணம், சித்திரவேலாயுதர் காதல், தமிழ்ச்சாசனங்களும் ஈழவரலாற்று ஆராய்ச்சியும், இலங்கையின் வணிககணங்களும் நகரங்களும், லங்காதிலக விகாரம், இலங்கையில் உள்ள நானாதேசி வணிகரின் வெண்கல முத்திரை, கந்தளாய்ப் பிரம்மதேயம், பொலனறுவைக்கால வெண்கலப்படிமங்கள், யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள், இலங்கையில் இந்துசமயம். இது மிகவும் பயனுள்ள ஒரு புத்தகம்.

---

2006 மார்ச் 1ல் இருந்து தபசுகாலம் ஆரம்பித்து விட்டது. இக்காலகட்டத்தில் உபவாசம் இருத்தல் சிறப்புச் செயலாகும்.

உண்மையில் உபவாசம் என்பது வெறும் பட்டினி இருத்தல் அல்ல, தாழ்ச்சி, பிறரன்பு, கொடை, பக்தி என்பனவற்றுடன் பட்டினி இருந்தால்தான் அது உபவாசம் என்கிறது திருச்சபை.

உபவாசம் என்பது புதுவாழ்வின் அடையா ளமும் கூட. இயேசு பொதுவாழ்க்கையை ஆரம்பிக்குமுன் நாற்பது நாள் நோன்பு இருந்து புதுவாழ்க்கைக்குத் தன்னைத் தயார் செய்தார்.

பழைய ஏற்பாட்டு மக்கள் தங்கள் பாவவாழ்க்கை நீங்க நோன்பு இருந்தார்கள். ஆனால் பாவமற்ற இயேசுவும் உண்ணா நோன்பு இருந்தார். பாவமுள்ள எங்களுக்காகத்தான் அவரின் நோன்பு.

எனவே உபவாசத்தின் மகிமையை உணர்ந்து அதனைக்கடைப்பிடிக்க இயலுமான முயற்சிகள் மேற்கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார். இப்போது, கடவுளது அரியணையில் வலது பக்கத்தில் வீற்றிருக்கின்றார்." (எபி:12:2)

+ சிலுவை சாபத்தின் சின்னமாகக் கருதப்பட்டது. (கலா. 3 : 13)
+ சிலுவை அவமானச் சின்னமாக எண்ணப்பட்டது. (எபி. 12 : 2)
+ சிலுவை பாவத்தின் சின்னமாய் இருந்தது. (மத். 27 : 32)
+ சிலுவை மகிமையின் நோக்கம் (கலா. 6 : 14)
+ சிலுவைதான் வெற்றிக்கு ஒரேவழி. (எபி. 12 : 2)



# சிலுவையால்...

**சிலுவை என்றால் என்ன?**

கிரேக்க மொழியில் 'ஸ்டௌராஸ்' என்று அழைக்கப்படும் சிலுவை, உரோம அரசால் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவைக் கொல்வதற்கென்று செய்யப்பட்ட குறுக்குச் சட்டம் கொண்ட மரமாகும். சிலுவையைப்பற்றிய தியானம் இரண்டு வகையாகப் பிரிக்கப்படலாம். அதாவது:

1) பொதுவான விளக்க தியானம்.
2) ஆவிக்குரிய விளக்க தியானம்.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்து "அவர் இகழப்பட்டார், மனிதரால் புறக்கணிக்கப்பட்டார், வேதனையுற்ற மனிதராய் இருந்தார், நோயுற்று நலிந்தார், காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார், அவர் இழிவு படுத்தப்பட்டார், அவரை நாம் மதிக்கவில்லை" (எசாயா 53:3) என விவிலியம் கூறுகின்றது.

இது மனுக்குலத்தை மீட்பதற்காக ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து பட்ட கஷ்டங்களையும், பாடுகளையும் நமக்கு வெளிப்படுத்துகின்றது. அவர்தான் நம் அனைவரையும் நம்முடைய பாவத்திலிருந்தும், அழிவிலிருந்தும் மீட்பதற்காக வந்தார். அவருடைய பாடுகள் வீணாகவில்லை. ஒரு மேன்மையான காரியம் நடக்கும்படியாக ஏற்பட்டது. அதாவது, "மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார், நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார், அவர் கடவுளால் வதைக்கப்பட்டு நொருக்கப்பட்டவர் என்றும் சிறுமைப்படுத்தப்பட்டவர் என்றும் எண்ணினோம். அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார், நம் தீச்செயல்களுக்காக நொருக்கப்பட்டார், நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார், அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்." (எசாயா 53:4-5)

அகில உலகிலும் அநேகர் சிலுவையினைச் சார்ந்த அநேக காரியங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவைகளில் சில, விபூதிப்புதன், தவக்காலம், குருத்துஞாயிறு, தூய வாரம், திருப்பாடுகளின் வெள்ளி மற்றும் உயிர்ப்புத் திருநாள். நாம் இங்கு நம்முடைய ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் பக்தி விருத்தி உண்டாகும் வகையில் சிலுவையினைப் பற்றித் தியானிப்போம்.

**சிலுவையின் பொதுவான விளக்கம்.**

1) சிலுவை இலச்சை மற்றும் தண்டனையின் சின்னம்
2) சிலுவை பாவத்தின் சின்னம்
3) சிலுவை சுயவெறுப்பின் சின்னம்
4) சிலுவை அவமானம் மற்றும் சாபத்தின் சின்னம்.

**1) சிலுவை, தண்டனையின் சின்னம்.**

மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிந்தவன் தான் மரத்தில் அல்லது சிலுவையில் தூக்கப்பட்டுக் கொல்லப்பட்ட வேண்டும் என்பது யூதரின் மரபு. எஸ்தரின் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு மரம் மொர்தெகாயைக் கொல்வதற்கென்று ஏற்படுத்தப் பட்டதாக நாம் அறியலாம். பொதுவாக தேசத் துரோகிகள்தான் இப்படி மரிப்பார்கள். ஆனால் இயேசுக் கிறிஸ்துவோ தாம் யார், எப்படி பரலோக தந்தையின் மகன் என்று தம்முடைய தெய்வீகத்தை வெளிப்படுத்தியதினாலே சிலுவையில் அறையப் பட்டார்.

"அவரைப் பார்த்துப் போற்றுதற்குரிய கடவுளின் மகனாகிய மெசியா நீதானே?" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி கேட்டார்கள். அதற்கு இயேசு "நானே அவர்" (மாற்கு14:61-62) என்று பதிலளித்தார். உடனே அவர்கள் எல்லோரும் "இவன் கடவுளைப் பழித்துரைக்கின்றான்" என்று சத்தமிட்டு இவன் சாகவேண்டியவன் என்று கூச்சலிட்டார்கள். கடைசியாக பிலாத்து கைகழுவி, அவரைச் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தார். இயேசுக்கிறிஸ்து, தான் வெளிப்படுத்தின சத்தியத்தின் நிமித்தம்-தண்டனையின் சின்னமாக சிலுவையினைச் சுமக்க வேண்டியதாயிற்று. அவ்வண்ணமாக நமக்கும் சில சமயங்களில் ஏற்படலாம். சத்தியத்தின் நிமித்தமாக துன்பம் வந்தாலும், சிலுவை போன்ற பாடுகள் வந்தாலும் நாம் கலங்காமல் சத்தியத்திற்குச் சாட்சியாயிருக்க வேண்டும்.

**2) சிலுவை, பாவத்தின் சின்னம்.**

எசாயா இறைவாக்கினர் இயேசுக்கிறிஸ்துவைக் குறித்துப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே "நமக்கு அமைதி தரும் தீப்பிழம்பு அவர்மேல் விழுந்தது" என்றார். இந்த முழு உலகத்தின் பாவம் என்கிற பாரத்தை இயேசுக்கிறிஸ்து சுமந்தார். ஆகவேதான் அவரை "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற பரலோக தந்தையின் செம்மறி" என்று நற்செய்தியில் கூறப்பட்டுள்ளது. நம்முடைய பாவங்கள், அக்கிரமங்களே ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து சுமக்க வேண்டிய பாரமான சிலுவையாயிற்று.

மனித உருவெடுத்த ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு ஒரு கட்டத்தில் சிலுவையைச் சுமப்பது இயலாமல் போனது. ஆகவேதான் இயேசு ஒரு சமயம் சீரத்தில் தாங்கமுடியாதவராய்த் தடுமாறிய போது படைவீரர்கள் வெளியே சென்று பார்த்த போது சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்ற பெயருடைய ஒருவரைக் கண்டார்கள். இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள்." (மத்:27-32) ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு பாரம் மிகுதியாயிருந்தது. ஆனாலும் அவரோ வாய் திறவாமல் இருந்தார்; எது வந்தாலும் பாடுகளைச் சகிப்பதற்கு அவர் ஆயத்தமாய் இருந்தார் என்பதனை இது காண்பிக்கின்றது. ஆனால் இத் தோல்வியைச் சகிக்க முடியாத சாத்தான் மனுக்குலத்தை இன்னும் தாக்கிக் கொண்டேயிருக்கின்றான். ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து



நம்முடைய பாவங்களை ஏற்கனவே சுமந்து விட்டார். ஆனால் சாத்தனோ மீண்டும் இப்பாவங்களை மனிதர்கள் மேல் வைக்க முற்படுகின்றான். மக்கள் விடுதலையாக இருப்பதை அவன் விரும்பவில்லை. இயேசுக் கிறிஸ்து நமக்காக சிலுவையில் எல்லாவற்றையும் சகித்து, சுமந்து தீர்த்து விட்டார்.


**3) சிலுவை, சுயவெறுப்பின் சின்னம்.**

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தம்மைப் பின்பற்றினவர்களுக்கு தங்களைத் தாங்களே வெறுத்து மற்றவர்களை நேசிக்கக் கற்றுக் கொடுத்தார். இயேசுக்கிறிஸ்துவால் மட்டும்தான் அப்படிக்கூற முடியும். காரணம் அவர் தம்மைத்தாமே வெறுத்து மற்றவர்களை நேசித்தார். "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்." (பிலி 2:6-8)

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தன்னலத்தை வெறுத்தார். இன்று உலகத்தில் அநேகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரிய மாளிகைகளில் வசிக்கின்றனர். அவர்களில் சிலர் சூழ்நிலையினால் ஏழ்மையாக்கப்பட்டால் தற்கொலையும் செய்து கொள்கின்றனர். ஏனென்றால் அவர்களால் அந்தப் பாரத்தைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. காரணம், அவர்கள் மற்றவர்களை நேசிப்பதைக்காட்டிலும், தங்களைத்தாங்களே அதிகமாக நேசிக்கின்றார்கள்; நேசித்தார்கள். எனவே இன்று நாம் நம்மைப்பார்த்து நாம் நம்மை நேசிக்கின்றோமா அல்லது மற்றவரை நேசிக்கின்றோமா எனக் கேட்டுக்கொள்வோம்.

**4) சிலுவை, அவமானம், சாபத்தின் சின்னம்.**

யூதப் பாரம்பரியத்தில் அடிமைகளாயிருக்க மாட்டார்கள். ஏனென்றால், அவர்களுக்கு எப்போதும் தாங்கள் உயர்ந்த சாதி என்ற எண்ணம் உண்டு. ஆகவே அவர்கள் மற்றவர்களைப் புற இனத்தவர் என்றும் எண்ணுவதுண்டு.

இயேசுக்கிறிஸ்து அடிமையின் கோலம் கொண்டார் என்று நாம் விவிலியத்தில் காண்கின்றோம். கிரேக்க பதத்தில் "டூலாஸ்" என்ற வார்த்தை, சுயமாய்ச் சிந்திக்கக்கூட அனுமதிக்கப்படாத அடிமையினைக் குறிக்கின்றது. இயேசு அப்படியான ஓர் அடிமையின் கோலம் கொள்ளக் காரணம், பரலோக தந்தையின் சித்தம் நிறைவேற தம்மைப் பணிவுடன் ஒப்புக்கொடுக்கவே. இயேசுக்கிறிஸ்து நம்மனைவரையும் சாபத்திலிருந்து மீட்பதற்காகத்தான் சாபமான சிலுவை மரணத்தைத் தம்மீது தரித்துக்கொண்டார். "மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர் என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார்." (கலா. 3:13)

**சிலுவையின் ஆவிக்குரிய விளக்கம்.**

1) சிலுவை ஓர் ஒப்புரவாக்குதலின் சின்னம்.

2) சிலுவை வெற்றியின் சின்னம்.

3) சிலுவை நித்திய மகிழ்ச்சிக்கான வழி.

**1) சிலுவை ஒப்புரவாக்குதலின் சின்னம்.**

இறைவனோடு மனிதன் ஒப்புரவாகுவதற்கென்று மனிதனுக்கு ஒரு வழிதான் கொடுக்கப்பட்டது. அதுதான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை மரணம். "நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே. நம் பாவங்களுக்கு மட்டுமல்ல, அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே" (1யோவான் 2:2) ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் மரித்திராவிட்டால் நாம் இன்று இறைவனோடு ஒப்புரவாக ஒரு சந்தர்ப்பமே கிடைத்திருக்காது. ஒரு சமயப் பண்டிதர் ஒப்புரவாகுதல் என்றால் இறைவனோடு ஒன்றுபடுதல் அல்லது இரண்டறக்கலத்தல் என்று கூறுகின்றார். ஆகவேதான் திருவிவிலியம் "இப்போது கடவுளோடு நம்மை ஒப்புரவாக்கியுள்ள நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் வழியாய் நாம் கடவுளோடு உறவுகொண்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். இம்மகிழ்ச்சியை நமக்குத் தருபவர் கடவுளே" (உரோ 5:11) என்று கூறுகின்றது. எசாயா இறைவாக்கினர் "அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார், நம் தீச்செயல்களுக்காக நொருக்கப்பட்டார், நமக்கு நிறை வாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அவர் தம் காயங்களால் நாம் குணமடைகிறோம்" (எசாயா 53:5) என்று கூறி சிலுவையின் மூலமாக நாம் இறைவனோடு ஒன்றாக்கப்பட்டிருக்கின்றோம் என்று விளக்குகிறார்.

**2) சிலுவை வெற்றியின் சின்னம்.**

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து கல்வாரிச் சிலுவையிலே கொண்ட வெற்றியை நாம் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் அது நமக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக தன்னலத்தை வென்றார். அந்நாட்களில் சிலுவை மரணம் அவமானமும், சாபமானதாகவும் எண்ணப்பட்டது. அதன் விளைவாக அந்த முழுக் குடும்பமும் மிகுந்த அவமானத்துக்குள்ளாக்கப்படும் என்பதனால் சிலுவை மரணம் எல்லோராலும் வெறுக்கப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டது. ஆனால் இயேசுக் கிறிஸ்துவோ எவ்வித சலனமும் இன்றி சிலுவை மரணத்தை மிகவும் துணிவோடும், வேதனையோடும் எதிர்கொண்டு அதனால் உண்டான அவமானத்தையும், வேதனையையும் சகித்ததோடு அல்லாமல் அதனை மேற்கொள்ளவும் செய்தார்.

வேதனை என்பது ஒருவராலும் விரும்பப்படாத அருமையான ஒருபரிசைப் போன்றது. எனவே நாம் வேதனை வேண்டாம் என்போமானால் அவரை வேண்டாம் என்று சொல்வதற்குச் சமமாகும். ஏனெனில், உலகத்தில் ஒருவரும் அனுபவித்திராத கஷ்டத்தைச் சகித்தவர்தான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து.

வேதனையை அவர் அனுபவித்ததினால் நம் வேதனை அவருக்கு நன்றாகவே தெரியும். அவருக்கு நம் வேதனை தெரியாது என்று நினைப்போமானால் நாம் அவருடைய வேதனையை மறுதலிப்பதோடு அவர் சிலுவையில் கொண்ட வெற்றி மற்றும் அவருடைய ஞானத்தையே மறுதலிப்பதற்கு ஒப்பாகும். விவிலியம் சொல்வதாவது: "நம் தலைமைக் குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல. மாறாக எல்லா வகையிலும் நம்மைப் போலச் சோதிக்கப்பட்டவர் எனினும் பாவம் செய்யாதவர்." (எபிரே 4:15) ஆம், உண்மையாகவே இயேசு வேதனை என்பதின் கூரினை முறித்து விட்டார். அவருக்கு நம்முடைய சோதனைகள் நன்றாகவே தெரியும். அவர்தாமே தம்முடைய கரத்தை நீட்டி நம்மை விடுவிப்பார்.

தொடர்ந்து ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து கடைசி எதிரியான மரணத்தை சிலுவையில் மேற்கொண்டார். இயேசுக்கிறிஸ்து தம்முடைய மலைப்பிரசங்கங்களில் இவ்வுலகில் எதிரிகளே இருக்க முடியாது என்று கூறுகின்றார். எனவேதான் அவர் சொன்னார். "...உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்:...." (மத் 5:44) ஆனால் நமக்கு இருக்கக் கூடிய எதிரியாகிய மரணத்தை அவரே மேற்கொண்டார். திருத்தூதர் பவுல் இந்த வெற்றியின் மேன்மையினைக் குறித்துப் பின்வருமாறு கூறுகின்றார். "அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் அணிந்து கொள்ளும் போது மறைநூலில் எழுதியுள்ள வாக்கு நிறைவேறும். "சாவு முற்றிலும் ஒழிந்தது, வெற்றி கிடைத்தது. சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி!" (1கொரி 15: 54, 55, 57)

ஒருவேளை மரணபயம் உங்களை இரக்கமின்றி வாட்டுகின்றதா? கவலைப்பட வேண்டாம். மாறாக, அந்தப் பயத்தை இயேசுவின் நாமத்தில் இப்போதே கடிந்து கொள்ளுங்கள். சரீரம் சம்மந்தப்பட்ட மரணம் ஏற்கனவே விழுங்கப்பட்டு விட்டது. எனவே அதன் பாரத்தை நாம் சுமக்க வேண்டியதில்லை. மரணத்தின் கூர் ஏற்கனவே கல்வாரிச் சிலுவையில் உலக இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவினால் உடைக்கப்பட்டு விட்டது. எனவே கவலை வேண்டாம், திடம் கொள்ளுங்கள்.

சிலுவையில் உண்டானது மற்றொரு வெற்றி. பாவத்திற்கு விரோதாமாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் புரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான ஓர் உண்மை என்னவென்றால், இயேசுக்கிறிஸ்து கல்வாரிச் சிலுவையின் மூலமாக பாவத்தைச் செயலிழக்கச் செய்து விட்டார். விவிலியம் சொல்கிறது: ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது, அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது. அதுபோலவே எல்லா மனிதரையும் சாவு கௌவிக்கொண்டது. ஆயினும் ஆதாம் முதல் மோசே வரையில் இருந்தவர்கள் ஆதாமைப்போல் கடவுளின் கட்டளையை மீறிப் பாவம் செய்யவில்லை, எனினும் சாவு அவர்கள் மீதும் ஆட்சி செலுத்திற்று. இந்த ஆதாம் வரவிருந்தவருக்கு முன்னடையாளமாய் இருக்கிறார். ஆனால், குற்றத்தின் தன்மைவேறு அருள்கொடையின் தன்மை வேறு. எவ்வாறெனில் ஒருவர் செய்த குற்றத்தால் பலரும் இறந்தனர். ஆனால் கடவுளின் அருளும் இயேசுக்கிறிஸ்து என்னும் ஒரே மனிதரின் வழியாய் வரும் அருள் கொடையும் பலருக்கும் மிகுதியாய்க் கிடைத்தது." (உரோம 5:12,14,15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமும், மரணமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். ஒன்று இல்லாமல் மற்றொன்று இருக்க முடியாது. பாவம்தான் மனிதனுக்குள் மரணத்தைக் கொண்டு வரும் வழி. ஆகவேதான் பவுல், "பாவமே சாவின்கொடுக்கு. பாவத்திற்கு வலிமை தருவது திருச்சட்டமே. ஆகவே நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவழியாக நமக்கு வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி." (1கொரி 15:56-57) என்று சொல்லி ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து எவ்வாறு மரணத்தையும், பாவத்தையும் மேற்கொண்டார் என்பதை விளக்குகின்றார்.

***3) சிலுவை நித்திய மகிழ்ச்சிக்கான வழி:***

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து எல்லா வற்றையும் மேற்கொண்ட பிறகு பரலோகத்தில் இருக்கும் பரலோக தந்தையின் வலது பக்கத்தில் என்றென்றும் இருக்கும் வண்ணமாகக் கடந்து சென்றார். இந்தச் செய்தியின் தலைப்பில் கூறப் பட்டுள்ள வாசகத்திற்கு ஏற்றாற்போல் பரிசுத்த பவுல் எடுத்துரைக்கும் சத்தியமானது "சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச்சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவும் உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார் என்று" பிலி 2:8-9ல் கூறப்பட்டுள்ளது.

ஆண்டவராகிய நம் இறைவன் இயேசுக் கிறிஸ்துவை உயர்த்தினார். இந்த உயர்த்தப்பட்ட இடம்தான் என்ன? அதற்கு தூயபவுல் கொடுக்கும் விடை என்னவென்றால் "நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்த வற்றை நாடுங்கள். அங்கு கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். (கொலோ. 3:1)

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து "என் தந்தையின் வீட்டிற்கு உங்களைக் கூட்டிக்கொண்டு செல்லும் வண்ணமாக நான் திரும்பவருவேன்" என்று கூறினார். சிலுவையின் வழியாகவே ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து நித்திய மகிழ்ச்சியைப் பெற்றுக் கொண்டார். இப்படியாக அவர் சிலுவைப் பாதையி னைக் கடந்து சென்று நமக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

இச்செய்தியினை நீங்கள் வாசிப்பதன் மூலமாக ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து உங்களோடிருப்பார் என்று நான் விசுவாசிக்கின்றேன். எனவே இதுவரை நீங்கள் சிலுவையினைக் குறித்து நினைத்தது போல (சாதாரண அடையாளமாக) எண்ணாமல், சிலுவையைப்பற்றி இந்தத் தவக் காலத்திலாவது தியானம் செய்யவேண்டும். சிலுவை யானது அவமானம், சாபம், பாடுகள், வேதனை போன்றவைகளின் சின்னமாகக் காணப்பட்டாலும் அது முடிவு அல்ல, அதுதான் நித்திய மகிழ்ச்சியின் ஆரம்பமாகும். பரலோகத்தில் இருக்கின்ற நம் பரலோக தந்தையினால் தனது எல்லாத் தந்திரங் களும் தவிடு பொடியாகப் போகிறதை அறியாமல் இருந்தான் சாத்தான். துக்கமும், துன்பமும் எப்படி மகிழ்ச்சியின் மூலாதாரங்களாக மாறிப்போகும் என்பதனை அவன் அறியவில்லை. இயேசுக்கிறிஸ்து வின் வேதனைகள் ஒவ்வொன்றும் மகிழ்ச்சியாக மாறிற்று. அதே வண்ணமாக உங்களுடைய கஷ்டங்களும், அவமானம், துன்பம், சாபம் எல்லாம் ஒருநாள் மகிழ்ச்சியின் மூலகாரணங்களாக மாற வேண்டும்.

ஏனென்றால் "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றிகொண்டு விட்டேன்." (யோவா 16:33) என்றும் "உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்" (யோவா 16:20) என்றும் இயேசு சொன்னார். எனவே துக்கம் இல்லாமல் மகிழ்ச்சி இல்லை. உங்கள் துக்கங்களின் மூலாதாரங்கள் தான் உங்கள் வாழ்க்கையைச் சுத்தம் செய்யும் சுத்திகரிப்பு ஆலை. அதில் உருவாகும் உற்பத்திப் பொருள்தான் மகிழ்ச்சி. இயேசுக்கிறிஸ்துவுக்கு சிலுவையும், வேதனையும்தான் மூலதாரங்கள். அவரது வாழ்வும், சிலுவைப்பாதையும் சுத்திகரிப்பு ஆலைகள். அவருடைய உயிர்த்தெழுதலும் விண்ணேறுதலும் உற்பத்திப் பொருள்கள். எனவே இந்த உற்பத்தியின் சரியான பயனைப்பெற நாம் தியாகம், பக்தி, தானதர்மம், தவமுயற்சி, ஒறுத்தல் போன்ற செயல்களில் ஈடுபடவேண்டும். இதன் மூலம் நம்முடைய பக்தியின் பரிசாகக் கிரீடம் கிடைக்கும். எனவே கிரீடம் வேண்டுமானால் சிலுவையினை வெறுக்கக்கூடாது. அதனைச் சகிக்க வேண்டும். பின் கிரீடம் தன்னால் தேடிவரும்.

**- அ. லூவிஸ் துவராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சில மாதங்களுக்கு முன்னர் துறவறவாழ்வில், வெள்ளி விழாக்கண்ட அருட் சகோதரர் கிறேசியன்பிள்ளை அவர்களின் பேட்டியொன்றை இப்பகுதியில் வெளியிட்டிருந் தோம். இப்பேட்டி தொடர்பாக வந்தாறுமூலையைச் சேர்ந்த ஒய்வு பெற்ற அதிபரும், பிரபல சமுகசேவையாளருமான ஆறுமுகம் ஐயா அவர்கள் எம்மிடம் ஒரு வினாவை எழுப்பியிருந்தார். அவரின் ஐயப்பாடு இதுதான். ‘அருட் சகோ. கிறேசியன் பிள்ளை’ அவர்கள் புனித வளனார் சபையைச் சேர்ந்தவர். அவர் பெயரின் பின்னால் S.S.J. என்றுதானே குறிப்பிடவேண்டும், ஆனால் F.C. என்றல்லவா குறிப்பிட்டுள்ளீர்கள்?’

எனவே இம்முறை இது தொடர்பாக “தொண்டனின் சில நிமிடங்களில் விளக்கப் படுகின்றது. கடந்த 2005ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மட்/ புனித மரியாள் இணைப் பேராலயத்தில் ஆயர். அதி. மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பெர்ணாண்டோ ஆண்டகை, அநுராதபுரம் ஆயர் ஆகியோரின் தலைமையில் இடம் பெற்ற பிரமாண்டமான ஆராதனை நிகழ்வு ஒன்றில் புனித. வளனார் சபையானது அன்புச் சகோதரர்கள் சபையுடன் சங்கமமானது. எனவே புனித வளனார் சபையின ரைக் குறிக்கும். S.S.J. என்னும் ஆங்கிலச் சுருக்க மானது அன்புச்சகோதரர்கள் சபையைக் குறிக்கும் இலத்தீன் சுருக்கமான F.C. என மாறியது.

எனவே இது தொடர்பாக போதிய விளக்கங் களைப் பெறுவதற்காக அன்புச் சகோதரர்கள் சபையைச் சேர்ந்த, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை அதிபர். அருட்.சகோதரர் ஜேம்ஸ் பீரில் (F.C.) அவர்களைத் தொண்டனின் சில நிமிடங்களுக்காகச் சந்தித்தோம்.

**:- அருட்சகோதரர் அவர்களே! உங்களது புனித வளனார் துறவறசபையானது, கடந்தவருடம் அன்புச் சகோதரர்கள் சபையுடன் இணைந்து விட்டது அல்லவா..? இது தொடர்பான சில விடயங்களை “தொண்டன்” வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம். முதலில் புனித வளனார் சபையைப்பற்றிச் சொல்லுங்கள்.**

:- புனித வளனார் சபையானது சுமார் 150 வருடகால சரித்திரம் கொண்டது. இது யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் (மேற்றிராசனம்) சேர்ந்த ஆயர். அதிவந்தனைக்குரிய பொஞ்ஜின் ஆண்டகையால் ஆரம்பிக்கப்பட்டது, இது சுதேச சபையாகும். இதுவரை 200க்கும் மேற்பட்ட துறவிகளைக் கொண்டிருந்தது. இது கொழும்புத்துறையிலிருந்து இயங்கியது. தற்போது அங்கே யாழ்மறைமாவட்ட பெரிய குருமடம் இயங்கிவருகின்றது. இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, ஊர் காவற்றுறை அந்தோனியார் கல்லூரி, கரம்பொன் திரு இருதயக்கல்லூரி போன்றவற்றை எமது புனித வளனார் சபையானது நடத்திவந்தது.

**:- அப்படியானால், இலங்கையின் கிழக்கு, மற்றும் மலையகப் பகுதிகளில் புனித. வளனார்சபையின் பணிகள் எப்படி வளர்ந்தன?**

:- திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயராக இருந்த அதி.வந்தனைக்குரிய இக்னேசியஸ் கிளனி (S.J) ஆண்டகையின் அழைப்பின்பேரில் மட்டக்களப்பில் எமது சபையானது இயங்க ஆரம்பித்தது. திருகோணமலை யிலும் சேவையாற்றியது. மட்டக்களப்பு புனித. அகுஸ்தினார் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி (தற்போது கத்தோலிக்கக் கழக மண்டபம்) கத்தோலிக்க அச்சகம், புனித மரியாள் பாடசாலை என்பன எமது முக்கியமான நிறுவனங்களாகும். கல்முனையிலும் எமது பணி பரந்தது.

இதுதவிர, ஹற்றன், தலவாக்கொல்லை, கம்பளை போன்ற இடங்களிலும் பாடசாலைகளில் பணியாற்றினார்கள்.

**:- வேறு நாடுகளிலும் புனித.வளனார் சபை இயங்கியதுண்டா?**

:- ஆம்! குறிப்பாக ரங்கூனில் பிரபல்யமான புனித. அந்தோனியார் கல்லூரி எம்முடையது. 2ம் உலக மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின்போது அங்கு பணியாற்றிய 3 அருட் சகோதரர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அக்கல்லூரி குண்டுத்தாக் கத்தால் தகர்ந்து போனது. அதற்குப் பிறகு சபையின் இயக்க மானது இலங்கையுடன் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது.

**:- என்னகாரணத்திற்காக புனித.வளனார் சபையானது, அன்புச் சகோதரர்கள் சபையுடன் சங்கமமாக்கப்பட்டது?**

:- புனித.வளனார் சபையில் தேவ அழைத்தல் குறைவடைந்து வந்தது. இதனால் பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது. சுமார் இருபது பேரளவில் மட்டுமே அருட்சகோதரர்கள் இருந்தனர். எனவே சிறப்பாகப் பணியாற்ற அன்புச்சகோதரர்கள் சபையுடன் இணைந்து கொண்டோம்.

**:- அப்படியானால், அன்புச்சகோதரர்கள் சபையைப்பற்றிச் சிறிது கூறுங்களேன்!**

:- அன்புச்சகோதரர்கள் சபையானது உரோமாபுரியை தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்றது. இது 28 நாடுகளில் தனது தளப்பணிகளை ஆற்றிவருகின்றது. 1500 க்கு மேற்பட்ட அருட்சகோதரர்கள் இதில் உள்ளனர். ஜோசப்கிறிஸ்ட் என்னும் குருவானவர் (இவர் பெல்ஜியத்தின் வின்சன் ~ டிபவுல் என்று அழைக்கப்படுவர்) இச்சபை யினை ஆரம்பித்தார். அக்காலத்தில் மனநோயாளர்களை சங்கிலியால் கட்டி சுரங்க அறைகளினுள் கட்டி வைக்கும் பழக்கம் பெல்ஜியம் நாட்டில் இருந்தது. சாப்பாடு மட்டும் கொடுப்பார்கள், குளிப்பு முழுக்கு எதுவும் கிடயாது, எலிகள் அவர்களைக்கடிக்கும், அப்படியே இறந்து விடுவார்கள். இதனைக்கண்டு பிடித்த பிதா. ஜோசப் கிறிஸ்ட் அவர்கள், அம் மனநோயாளர்களின் விடுதலைக்காகப் பாடுபட்டார், சுகப்படுத்தினார், அர்ப்பணிப்போடு பணியாற்றினார்.

**:- இருசபைகளும் இணைந்தபின் நீங்கள் காணும் அநுகூலங்கள் என்ன?**

:- தற்போது எமது அருட்சகோதரர்கட்கு மிக அதிக அளவிலான ஆன்மீகப் பயிற்சிகள் கிடைக்கின்றன. இலங்கை, தவிர்ந்த வேறு எந்த நாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புண்டு, பலநாடுகளினதும் பல்லின கலாசார முறை மைகளை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் உண்டு.

**:- அன்புச் சகோதரர்களின் பணி வெளிநாடு களில் எப்படிக் காணப்படுகின்றது?**

:- சிறப்பாகக் காணப்படுகின்றது. குறிப்பாக ஏராளமான வைத்தியசாலைகள், கல்லூரிகள், வெளியீட்டகங்கள் என்பன நடாத்தப்படுகின்றன.

**:- இலங்கையில் இச்சபையின் கட்டமைப்பைப்பற்றி சற்றுக் கூறமுடியுமா?**

:- ஆசியாவிற்குப் பொறுப்பான அருட். சகோதரர் பாவோ (Babo) அடிகளார் அவர்கள் இலங்கைப் பிராந்தியத் திற்கும் பொறுப்பாக உள்ளார். இது தவிர அருட் சகோதரர் கள் கிறிஸ்டி, எஸ்.பி.கனிசியஸ், டபிள்யு. எம். மிக்கேல், ஆகியோர் முறையே கல்முனை, மட்டக்களப்பு, திருகோண மலை ஆகிய இடங்களின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாய் உள்ளார்கள். அருட்சகோதரர் பாவோ(F.C.) அவர்கள் கட்டுகஸ்தோட்டையில் இருந்து இயங்குகின்றார்.

**:- அன்புச்சகோதரர் சபையில் ஒருவர் இணைந்து அருட்சகோதரராக வரவிரும்பினால் என்ன செய்யவேண்டும்?**


:- எங்களுடன் தொடர்பு கொண்டு 'அழைத்தல் ஊக்குவிப்பாளர்' மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள். ஆறு வருடங்கள் படிக்கவேண்டும். இதில் மூன்று வருடங்கள் களப்பயிற்ச்சியில் ஈடுபடவேண்டும். கட்டுகஸ்தோட்டையில் ஆன்மீகப்பயிற்ச்சி நிலையம் உண்டு. களப்பயிற்சிகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உண்டு. தற்போது கூட எமது அருட்சகோதரர்கள் மூவர் வெளிநாட்டில் உயர்கல்வி பெறச் சென்றுள்ளார்கள்.

**ஈற்றில் தனது பெறுமதி மிக்க நேரத்தை ஒதுக்கித்தந்த அதிபர். அருட்.சகோதரர். ஜேம்ஸ்பீரிஸ் (F.C) அவர்கட்கு "தொண்டன்" சார்பில் நன்றிகூறி விடை பெற்றுக்கொண்டோம்.**

**– ஆழியோன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாக்கோப்பின் வாழ்வில் இறைபராமரிப்பு

இரட்சணிய வரலாற்றில் இடம் பிடித்துள்ள யாக்கோபு தன் வாழ்வில் தந்திரமாய்த் தந்தையின் ஆசீரைப் பெறுகிறார். தமையனின் பிறப்புரிமையினையும் ஏமாற்றிப் பெற்றுக் கொள்கிறார். ஆயினும் இறைவன் மக்கள் பலவீனத்தினாலோ அல்லது தீய மனப்பான்மையினாலோ செய்யும் குற்றங்களைப் பயன்படுத்தி இறுதியில் தாம் நினைத்ததைச் செய்கிறார் என்பதினை விளக்குகிறார் ஆசிரியர். தீமையில் இருந்து நன்மையினை விளையச் செய்பவர் இறைவன் என்பது நன்கு புலப்படுகிறது. இத்தகைய பல காரியங்களைப் புரிந்த யாக்கோப்பின் வாழ்வினை எடுத்துக் கொண்டால், இறைபராமரிப்பு அவருக்கு நிறையவே இருந்தது எனக் காணக்கூடியதாய் உள்ளது.

* தொ.நூ 28:10. இங்கு யாக்கோபு பெயேர்செபாவில் இருந்து கரானை நோக்கிப் புறப்படுகையில் இரவாகி விடவே ஒரு கல்லைத் தலையணையாய் வைத்து நித்திரை செய்கையில் ஒரு கனவு காண்கிறார். இக்கனவின் மூலம் இறைவன் உண்மையாகவே அவருடன் இருப்பதை உணர்கிறார். "நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் நான் உனக்குக்காவலாய் இருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச் செய்வேன். ஏனெனில், நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிடவே மாட்டேன்." என்கிறார். இவ்வாறு தனது வாக்குறுதியினைப் புதுப்பிக்கிறார். தனது பராமரிப்பினையும் தெரிவிக்கிறார்.

மேலும் தொ.நூ 30:20 இல் யாக்கோபு லாபானுடன் இருக்கையில் லாபானுடைய சொத்துக்கள், ஆடு, மாடுகள் தொகை அதிகரித்தது. யாக்கோப்பின் பொருட்டு இறைவன் தன்னை ஆசீர்வதிப்பதை உணர்ந்த லாபான், உமக்குத் தடையேதும் இல்லையாயின் என்னுடன் தங்கும் எனக் கேட்கிறார். இதன் மூலம் இங்கு யாக்கோப்பிற்கிருந்த இறை பராமரிப்பினைக் காண முடிகிறது.

மற்றும் தொ.நூ 31:24 இலே யாக்கோபு லாபானின் இரு மக்களுடனும் அவருக்குத் தெரியாமல் தப்பியோடுகிறார். ஆயினும், மீண்டும் அவரைத் துரத்திப் பிடித்துக் கொண்ட லாபானிடம் இருந்து இறைவன் யாக்கோபைக் காப்பாற்றுகிறார். "நீ யாக்கோப்பிடம் நல்லதோ, கெட்டதோ யாதொன்றும் பேசாதே" என எச்சரிக்கின்றார். இங்கும் யாக்கோபிற்கிருந்த இறைபராமரிப்பைக் காண முடிகிறது.

மற்றும் தொ.நூ 32:22. யாக்கோபு தன் மனைவி பிள்ளைகளுடன் மம்ரே திரும்பிக் கொண்டிருக்கையில் இனந்தெரியாத ஒருவருடன் போராட வேண்டிய வேளையில் அங்கும் இறைபராமரிப்பை உணர்கிறார். "இஸ்ரயேல்" எனும் புதிய பெயரினையும் பெறுகிறார்.

மேலும், தொ.நூ 34:24 யாக்கோபு சிக்கிமரை அழித்து தன் இனத்தாரைப் பாதுகாக்கிறார். அத்துடன் தொ.நூ 35:10 இல் இறைவன் அவரது பெயரை மாற்றி, அவரையும் சந்ததியையும் ஆசீர்வதித்தார். "நானே எல்லாம் வல்ல இறைவன், நீ பலுகிப் பெருகுவாய்" எனக் கூறுகிறார். ஆபிரகாமுக்கும், ஈசாக்கிற்கும் அளித்த நாட்டை உனக்கும், உன் சந்ததியினருக்கும் தருவேன் என்கிறார். தன்னோடு இறைவன் பேசிய அந்த இடத்திற்கு யாக்கோப்பு "பெத்தேல்" எனப்பெயரிட்டார். இவ்வாறு தந்திரத்தினால் பல தீமைகள் புரிந்த யாக்கோப்பின் வாழ்விலே இறைவன் அநேக ஆசீர்வாதங்களைக் கொடுத்து, அவரைப் பராமரித்து வழி நடத்தியமையினைக் காணக் கூடியதாயுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் கத்தோலிக்கத் தமிழ் இலக்கியம்

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலேயிருந்து வைகை யாற்றிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்போர் நினை விலே நடந்தோரென
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்"

இவ்வாறு தமிழகத்திலே வளர்ந்து வரும் நம் செந்தமிழ்க் கன்னி ஈழ நாட்டில் வளரவில்லையா? ஈழத்திலும் வளர்ந்து வருகிறாள். பல இன்னல்கள், இடையூறுகளுக்கு ஆளாகி வளர்ந்து வந்தாள். தமிழகத்தில் ஏற்பட்ட அதேகதிதான் ஈழத்திலும் அவளுக்கு ஏற்பட்டது. அன்று மாத்திரம் அவள் இன்னல்கள் இடையூறுகளால் தாக்கப்படவில்லை, இன்றும் தாக்கப்படுகிறாள். ஈழத்திலே இளமைப் பருவத்திற் பல இன்னல்களுக்கு இரையாகியதனால் அவளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டளவிலே ஈழத்தில் தமிழை வளர்க்க யாழ்ப்பாண மன்னர்கள் உதவினர். எனினும் அவர்களின் ஆதரவு பெரிதல்ல, அளவிடக் கூடியதல்ல. ஈழத்து மன்னர்களிலும் பார்க்க, தமிழின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கம் அளித்தவர்கள் சமயங்களைப் பரப்பும் நோக்கம் கொண்ட சமய குருமார்களும், சமய அபிமானிகளுமே. அவ்வாறு தமிழை வளர்ப்பதற்குதவிய சமயங்களுட் கத்தோலிக்கமும் ஒன்றாகும்.

தமிழகத்தில் சமயங்களினால் தமிழ் பெரிதும் வளர்ந்து வந்ததென்பதை இலக்கிய வரலாற்றிலிருந்து அறிகிறோம். சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இஸ்லாம், கத்தோலிக்கம், கிறிஸ்தவம் ஆகிய பல்வகைப்பட்ட சமயங்கள் தமிழகத்திலே பரவியிருந்தன. இச் சமயங்கள் மூலம் தமிழ் இலக்கியங்களும், தமிழ் மொழியும் வளர்ந்தன என்பதில் ஐயமில்லை. பல்வகைப்பட்ட சமயச் சார்பான இலக்கிய நூல்களே இதற்குச் சான்றாகும். ஈழத்திலும் இவ்வாறு சமயங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. அவற்றுள்ளே கத்தோலிக்க சமயம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. கத்தோலிக்க சமயத் தொண்டு, சமயத் தொண்டாக மாத்திரமன்றித் தமிழ்த் தொண்டாகவும் விளங்கியது.

கோட்டை அரசன் புவனேகபாகு (Bhuvaneka Bahu) வின் அழைப்பிற்கிணங்கி, முதல் கத்தோலிக்க சமய குருமார்கள் 1543-ம் ஆண்டில் ஈழத்திற்கு வந்தனர். அவர்கள் "பிரான்சிஸ்கன்ஸ்" (Franciscans) என்று அழைக்கப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து வேறு பல குழுவினரும் வந்தனர். அவர்களுக்குள்ளே குறிப்பிடத்தக்கவர்கள் இயேசு சபைக் குருமார்கள் (Society of Jesas) தொமினிக்கன் குருமார்கள் (Dominicans) அகஸ்தினியன் குருமார்கள் (Augustanians) ஒறேரோறியன் குருமார்கள் (Oratorians) மேனாட்டிலிருந்து வந்த இக் கத்தோலிக்க குருமார்கள் கஷ்டங்களையும், சிரமங்களையும் பாராது விடா முயற்சியினால், அனேகரைத் தமது சமயத்திற்குத் திருப்பினர். சமயத்தைப் பரப்பும் நோக்கங் கொண்ட குருமார்கள் சுதேச மொழிகளைக் கற்று, சமயக் கொள்கைகளைப் போதித்தனர். கல்வி கற்பித்தலையே மத மாற்றஞ் செய்வதற்கு முக்கிய கருவியாகக் கொண்டனர். அதனால் அவர்கள் தமிழ்க் கல்விக்கு முக்கிய இடம் அளித்தனர்.

ஈழத்திலே முதன் முதலாகத் தமிழைக் கற்றுத் தேர்ச்சியடைந்த கத்தோலிக்க குரவர் வண கென்றிக் கென்றிக்கு (1520- 1600) என்பவராவர். இவர் 1561ம் ஆண்டிலிருந்து 1564ம் ஆண்டு வரை மன்னாரிலிருந்து சமயத்தைப் போதித்தவர். இவருடைய தமிழறிவின் திறமையைக் கருதி, 1566ம் ஆண்டில் இவரை 'புன்னைக்காயல்' என்னும் இடத்திலுள்ள தமிழ்ச் சர்வகலாசாலைக்குத் தலைவராக நியமித்தனர். கல்வித் துறையில் கத்தோலிக்க குருமார்கள் அதிக ஊக்கமும் கவனமும் செலுத்தினர் என்பதை இது காட்டுகிறது.

போர்த்துக்கீசருடைய காலத்திலே கத்தோலிக்க சமயக் கல்வியின் மூலம் தமிழ் வளர்ந்து வந்தது. கத்தோலிக்க குருமார்கள் கல்வித்துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுத் தமிழை வளர்த்தனர். கத்தோலிக்க சமயப் பிரசாரத்திற்கு வேண்டிய நூலை முதலில் எழுதியவர் வண. கென்றி கென்றிக் என்பவர். சமயத் தொண்டிலே ஈடுபட்ட இக் குரவர் தமிழிலே ஓர் இலக்கணமும் சொல்லகராதியும் எழுதினார். இவ்விரு நூல்களும் சமயக் குருமாரின் தேவைக்காக எழுதப்பட்டன. இவர் ஆரம்பித்து வைத்த தமிழ்த் தொண்டைத் தொடர்ந்து பல சமயச் சார்பான தமிழிலக்கிய நூல்கள் எழுந்தன. போர்த்துக் கீசருடைய காலத்தில் எழுந்த இரண்டு கத்தோலிக்க சமயச் சார்பான தமிழ் இலக்கிய நூல்கள் சந்தியோகு மாயோர் அம்மானை, ஞானப்பள்ளு என்பனவாகும். சந்தியோகுமாயோர் அம்மானை என்னும் நூலை பேதுரு (Pedro) என்பவர் 1647ல் பாடியதாக அறிகின்றோம். புதியதொரு இலக்கி அமைப்புக் கொண்ட இந் நூல் தமிழிலக்கியத்தில் ஒரு முக்கிய நூலென்றே கருதக் கிடக்கின்றது. இந் நூல் கிளாலியில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் சந்தியோகுமாயோர் மீது பாடப்பட்டது. சந்தியோ குமாயோர் அம்மானை கத்தோலிக்கருக்கு மட்டுமன்றி தமிழறிவுள்ளோருக்கும் இலக்கிய விருந்தாகும். இந் நூலை ஈழத்திலே பழைய கத்தோலிக்க இலக்கிய நூலெனக் கருதுகின்றனர். ஞானப்பள்ளு என்ற நூல் 1650ம் ஆண்டளவில் பாடப்பட்டதென அறிகிறோம். பள்ளு என்பது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். இப் பிரபந்த வகையை உழத்திப் பாட்டு என்றும் சொல்வதுண்டு. இப் பிரபந்தம் சிந்து, விருத்தம் முதலியவற்றைக் கொண்டுள்ளது. முக்கூடற் பள்ளு, பறாளை வினாயகர் பள்ளு போன்ற நூல்களைப் போலவே ஞானப் பள்ளும் சமயச் சார்பாக எழுந்ததாகும். கத்தோலிக்க சமயக் கொள்கைகளையும், கோட்பாடு களையும், அடிப்படையாக வைத்துப் பாடப்பட்டது. கற்பனையும், கவிச் சிறப்பும் கொண்டு விளங்குகிறது இந்நூல். ஈழத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் பெருமைக்கும் சான்றாக இவ்விரு கத்தோலிக்க தமிழ் நூல்களும் விளங்குகின்றன.

இத் தமிழ்த் தொண்டு, போர்த்துக்கீசரின் வீழ்ச்சியுடன் 17ம் நூற்றாண்டிற் பிற் பகுதியில் ஓரளவு தடைப்பட்டது. ஈழத்திலிருந்து போர்த்துக்கீசரை ஒல்லாந்தர் அகற்றி, ஈழத்தைக் கைப்பற்றினர். (இவர்களும் போர்த்துக்கீசரைப் போல் இலங்கை முழுவதையும் ஆளவில்லை, கரையோரப் பகுதியை ஆண்டனர்.) ஒல்லாந்தர் ஆட்சியில் அமர்ந்ததும் அவர்கள் தங்களுடைய புரொட்டெஸ்தாந்து சமயத்தைப் பரப்பத் தொடங்கினர். அவர்களுடைய சமயத்தைப் ஆங்கிலத்தில் (Dutch Reformed Church) என்று சொல்லுவார்கள். ஐரோப்பாக் கண்டத்திலேயே கத்தோலிக்கத்திற்கும் டச்சுக்காரராற் பரப்பப்பட்ட புதிய சமயத்திற்கும் (Dutch Reformed Church) பகையிருந்தது. 16ம் நூற்றாண்டில் அச்சமயப் பகை ஈழத்திலும், டச்சுக்காரரின் வருகையுடன் தொடங்கியது. சமயப் பகை தமிழலக்கிய வளர்ச்சிக்கு உதவியதைத் தமிழகத்தின் இலக்கிய வரலாற்றிலே அறிந்திருக்கின்றோம். அது போல ஈழத்திலும் கத்தோலிக்க சமயத்திற்கும் டச்சுக்காரருடைய புரொடெஸ்தாந்து சமயத்திற்குமிடையிற் கிளம்பிய பகையும் ஈழத்திலே தமிழின் வளர்ச்சிக்கு உதவிய தெனலாம். டச்சுக்காரரின் சமயம் மக்களிடையே பரவத் தொடங்கியதினால், கத்தோலிக்க சமயம் தளர்ச்சியுறத் தொடங்கிற்று. எனினும் 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பத்தி வைராக்கியமுள்ள கத்தோலிக்க குருமார்கள், டச்சுக்காரரின் வேத கலாபனைக்குத் தளரமால் தங்கள் சமயத்தை நிலை நிறுத்த முன் வந்தனர். அவ்வாறு கத்தோலிக்க சமயத்தை ஈழத்தில் அழிந்து போகா வண்ணம் நிலை நாட்டிய குருமாருள் போற்றத் தக்கவர் இருவர். யோசெவ்வாஸ் முனிவரும், யாக்கோமெ கொன்சல் வாஸ் முனிவருமே அவ்விருவராகும். யோசெவ்வாஸ் முனிவர் 1687ல் ஈழத்திற்கு வந்தபோது, கத்தோலிக்க சமயம் அழியும் நிலையெய்திருந்தது. ஒல்லாந்தரின் அட்டூழியங்க ளினாலும், சமயப் போரினாலும் போர்த்துக்கீச குரு மார்கள் எழுதிய பல தமிழ் நூல்கள் அழிந்து போயின. கத்தோலிக்கருக்குத் தேவையான செபப் புத்தகங்கள், ஞான உபதேசங்கள். முதலியன அழித்தொழிக்கப்பட்டன. இந் நிலையிலேதான் யோசெவ் வாஸ் முனிவர் ஈழத்திற்கு வந்தார். தமிழ்க் கத்தோலிக்கருக்கு ஞானஉபதேசங்கள், செபப் புத்தகங்கள் முதலிய பல கத்தோலிக்க போதனைகளைக் கூறும் நூல்கள் தேவைப்பட்டன. இதையுணர்ந்த, யோசெவ் வாஸ் முனிவர் தமது பெரு முயற்சியினால் பல சமயப் போதனைகளைக் கூறும் ஞான உபதேசங்கள், செபப் புத்தகங்கள், பிரார்த்தனைப் புத்தகங்கள், சிலுவைப் பாதைத் தியானங்கள் ஆகியவற்றைத் தமிழலே எழுதினார். இவைகள், ஈழத் தமிழ் உரை நடை வரலாற்றிலே குறிப்பிடத்தக்கன.

தமிழகத்திலே பல உரை நடை நூல்களை எழுதிய தத்துவ போதக சுவாமிகள் (Rodert de Nobili) வீரமா முனிவர் (Constantin Beschi) என்ற இரு கத்தோலிக்க குருமார்கள் எவ்வாறு திகழ்ந்தார்களோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல, ஈழத்திலும் யக்கோமெ கொன்சல் வாஸ், (Jacome Gonsalvaz) என்ற கத்தோலிக்க பெரியாரும் திகழ்ந்தார். ஈழ நாட்டின் தமிழ் இலக்கிய வரலாற்றிலே இவர் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றார் என்பது சிலர் கொள்கை. யக்கோமெ கொன்சல் வாஸ் எழுதிய நூல்களே இதற்குச் சான்றாகும். அவர் சமய சம்பந்தமான நூல்கள் மாத்திரமன்றி கண்டன நூல்களும் எழுதியிருக்கிறார்.

யக்கோமெ கொன்சல் வாஸ் என்பவரின் அறிவுத் திறனை அறிந்து யோசெவ்வாஸ் என்பவர் அவரைத் தமிழ் கற்கும்படி வற்புறுத்தினார். தமிழைக் கற்றறிந்த கொன்சல்வாஸ் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகளை, கொள்கைகளை, சடங்குகளை, தத்துவங்களைக் கூறும் பல நூல்களை தமிழிலே இயற்றினார். அவர் எழுதிய நூல்களாவன:
1) கிறிஸ்தியனின் ஆலயம் 2) தேவ அருள் வேத புராணம் 3) சத்திய வேத சஞ்சேபம் 4) சுவிசேஷ விருத்தியுரை 5) வியாகுல பிரசங்கம். இவற்றுள்ளே சிறந்த நூல் வியாகுல பிரசங்கம். இந் நூல் 1730ம் ஆண்டில் எழுதப்பட்டது. ஆன்மாவின் ஈடேற்றத் திற்கு வழிகாட்டியாகவும் சோக உணர்ச்சியை ஊட்டக் கூடியதுமான ஒன்பது பிரசங்கங்களைக் கொண்டது. இயேசுநாதரின் வாழ்க்கையின் கடைசிப்பகுதியைக் காட்டுகிறது இந் நூல். அவர் படும் பாடுகளையும், மரண அவஸ்தையையும் விளக்கி, சோக உணர்ச்சி ஊட்டும் வகையில் அமைந்துள்ள இவ்வுரை நடையி லக்கிய நூலை வேறு சமய இலக்கியங்களில் காண முடியாதெனக் கூறலாம்.

கொன்சல்வாஸ் முனிவர் மேலே கூறிய நூல்களை விட, பரிசுத்தவாளரின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட ஒரு நூலை எழுதினார். கத்தோலிக்கருக்குச் சுத்தவாளரின் வாழ்க்கை யையும் அவர்களின் நற்குண, நற்செயல்களையும் எடுத்துக் காட்டும் நூல்கள் அக்காலத்தில் இருக்க வில்லை. ஆகவேதான், முப்பது சுத்தவாளரின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட 'தர்ம உத்தி யானம்' என்ற நூலை எழுதினார் கொன்சல்வாஸ் முனிவர். மேலும், கத்தோலிக்க மதத்தில் தளரா நம்பிக்கை யூட்டுவதற்கும், புனித வாழ்வை நடத்துவதற்கும் வழியாக 'அற்புத வரலாறு' என்ற நூலையும் எழுதினார். கத்தோலிக்கருடைய ஆன்ம ஈடேற்றத்தை முன்னிட்டு ஞான உணர்ச்சி, சுகிர்தாரப் பணம் என்ற இரு நூல்களையும் எழுதினர். உணர்ச்சியுடன் விளக்கங்காட்டிப் போதனை களைக் கூறுவதற்கு இவ்விரு நூல்களும் தமிழிலே சிறந்த உரை நடை நூல்கள் எனலாம்.

ஒல்லாந்தரின் வருகையினால், ஈழத்திலே கத்தோலிக்க சமயத்திற்கு மாறாக வேறொரு சமயம் (Dutch Reformed Church) பரவத் தொடங்கிற்றென முன்பு கூறினோம். இவ்விரு சமயங்களுக்கிடையே பகை மூண்டது. ஒல்லாந்தர் தம்முடைய ஆதிக்கத்தின் கீழ், புதிய சமயத்தைப் பரப்பினர். பரப்பினது மட்டுமன்றி கத்தோலிக்கருக்கு அட்டூழியங்களும் செய்தனர். சமயப் பிரசாரங்கள் நடந்தன. கத்தோ லிக்க குருமார் புரொட்டெஸ்தாந்து (Dutch Refomed church) சமயத்திற்கு மாறாகப் பல கண்டன நூல்களை வெளியிட்டனர். அவற்றுள்ளே யக்கொமெ கொன்சல் வாஸ் முனிவரால் எழுதப்பட்ட 'வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக் கொண்ட தர்க்கம்' முக்கியம் வாய்ந்ததாகும். அந்நூல் கத்தோலிக்க சமயத்தின் கொள்கைகளைக் காட்டி, புரொட்டெஸ் தாந்து சமயத்தைத் தாக்கி எழுதப்பட்டது. சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் எளிய நடையிலே அமைந்துள்ளது. பதினொரு தர்க்கங்களைக் கொண்டு விளங்குகின்றது இந்நூல். இந்நூலை விட 1) நவ தர்க்கம் 2) முசல்மான் வேதம் (Musalman Vedam) 3) நாலு வேதம் என்ற நூல்களையும் எழுதினார். நாலு வேதம் என்ற நூல் புரொடெஸ்தாந்துமதம், இந்துமதம், புத்தமதம், முகமதுமதம் ஆகிய நான்கு மதங்களுக்கும் மாறாக எழுதப்பட்ட நூல். இவ்வாறு கொன்சல்வாஸ் முனிவர், கத்தோலிக்க சமயத்தை மாத்திரம் வளர்த்த தோடன்றி தமிழ் இலக்கியத்தையும் வளர்த்திருக்கிறா ரென்றே கூறலாம். இவருடைய நூல்கள் ஈழத்தமிழ் இலக்கிய, உரைநடை வரலாற்றிலே சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஒறேரோறியன் (Oratorians) சபைக்குரு மார்கள் தமிழிலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டு கொன்சல்வாஸ் முனிவருடன் நின்றுவிட வில்லை. கொன்சல்வாஸ் முனிவர் 1742ல் காலஞ்சென்றார். இவரைப் பின்பற்றிய ஒறேரோறியன் குருமார்களுள் அறிவிற் சிறந்தவரும், சமய போதகருமான பசெகோ (Pacheo) என்பவர் தமிழ்க் கத்தோலிக்க இலக்கியத்தை வளர்த்துவந்தார். பசெகோ என்பவர் எழுதியவற்றுள் சிறந்து விளங்கும் நூல் தேவப்பிரசையின் திருக்கதை (The History of people of God) என்பதாகும். இந்நூல் இஸ்ராயேல் தேசத்தினதும் கத்தோலிக்க சமயத்தி னதும் வரலாற்றைக் கூறுகின்றது. பசெகோ என்பவர் சமயக் குரவரும் ஈழத் தமிழ்த் தொண்டருமான யோசெவ் வாஸ் என்பவரின் சரித்திரத்தை எழுதினார். இவர் 'அழுகைக் குரவை' என்ற சோகப் பாடலையும் எழுதினார். இவருடைய காலத்திலும் கத்தோலிக்க-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரொட்டெஸ்தாந்து சமயப் பகை தொடர்ந்து இருந்தது. இவருடைய காலத்தில் ஒல்லாந்தர் கொழும்பிலே ஓர் அச்சுக்கூடம் நிறுவி பல கண்டன நூல்களை அச்சிட்டுப் பரப்பினர். பிலிப் டி மெல்லோ என்பவர் கத்தோலிக்க சமயத்திற்கு மாறாக "சத்தியம் செயம்" என்ற கண்டனநூலை வெளியிட்டார். இந் நூலிற்கு மறுப்புக் கண்டனமாக 'சத்திய விரோத சங்கரணம்' என்னும் நூலை பசெகோ என்பவர் எழுதியதாக அறிகிறோம். இவ்வாறு, சமய இலக்கியங்கள் ஈழத்திலே வளர்ந்து செல்வதற்கு கத்தோலிக்க குருமார்கள் பெரிதும் உதவினர்.

சமயக் குரவர் மாத்திரமன்றி, கத்தோலிக்கப் புலவர்களும் தமிழை வளர்த்தனர். அவர்களுக் குள்ளே புகழ் பெற்றவர் தெல்லிப்பளையைச் சேர்ந்த அருளப்பு பூலோசிங்க முதலியாராகும். இவர் திருச்செல்வர் காவியம் என்னும் நூலை இயற்றினார். இக் காவியம் நாட்டுப் படலம் தொடக்கமாக 23 படலங்களைக் கொண்டு விளங்குகின்றது. 1946 விருத்தங்களைக் கொண்டுள்ளது. காவிய இலக் கணத்திற்கு அமைய இயற்றப்பட்டது. பூலோகசிங்கம் முதலியாரை விட, 1757ல் பிரான்சிஸ் பிள்ளைப் புலவர் என்று ஒருவர் சில பாடல்களை கிறிஸ்து மீது பாடிய தென அறிகிறோம்.

இவ்வாறு கத்தோலிக்க சமயம் ஈழத்திலே, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்த தொண்டாற்றி இருப்பதை நாம் மறக்க முடியாது.

(நன்றி-போது)

## வெள்ளிவிழாக்கண்ட மன்னார் மறைமாவட்டம்

மன்னார் மறை மாவட்டம் உருவாகி இருபத்தி யைந்து ஆண்டுகள் நிறைந்ததை ஒட்டி மாபெரும் ஜூபிலி விழா கொண்டாடப்பட்டது. ஜூபிலிவிழா நிகழ்வுகள் கடந்த ஜனவரி 28ம் திகதி தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் நடைபெற்றன.

ஜூபிலி விழாத்திருப்பலியை திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மாறியே செனாறி ஆண்டகை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். யாழ் ஆயர் தோமஸ் சௌந்திரநாயகம், மன்னார் ஆயர் இரா.யோசேப்பு ஆண்டகை, பதுளை ஆயர் வின்ஸ்ரன் ஆண்டகை, அநுராதபுர ஆயர் நோபட் அன்ராடி ஆண்டகை, இன்னும் துறவற சபைகளின் மாகாண முதல்வர்கள், அருள் தந்தையர்கள், அருள் சகோதர, சகோதரிகள் இறை மக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

வடபகுதியை சங்கிலியன் ஆண்டகாலத்தில் மன்னார் தோட்டவெளிப்பகுதியில் 600க்கும் மேற்பட்ட விசுவாசிகள் தமது விசுவாசத்துக்காகக் குருதி சிந்தி வேதசாட்சிகளாகினர். வேதசாட்சிகளின் இரத்தத்தால் புனிதம் பெற்ற மன்னார் நிலப்பரப்பு யாழ்மறை மாவட்டத் தோடு முன்னர் இணைந்திருந்து. 1981ம் ஆண்டு தனிமறை மாவட்டமாக உருவாகியது. அதன் முதல் ஆயராக தற்போதைய யாழ் ஆயர் பேரருள் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து பேரருள்தந்தை இராயப்பு யோசப் ஆண்டகை ஆயராகப் பணிபுரிகிறார். இருபத்தியைந்து ஆண்டு காலத்தில் மன்னார் மறை டாவட்டம் பல்வேறு வகையிலும் துரித வளர்ச்சியைப் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

## இரத்தினபுரி மறை மாவட்டத்துக்குப் புதிய ஆயர்

இரத்தினபுரி மறை மாவட்டத்தின் புதிய ஆயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அருள்தந்தை ஜவன் திலக் ஜெயசுந்தர அவர்கள் எப்ரல் மாதம் 8ம் திகதி திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

4 ஆயிரத்து 938 சதுரமைல் பரப்பளவு கொண்ட இரத்தினபுரி மறைமாவட்டத்தில் 17இலட்சத்து 87 ஆயிரத்து 938 மக்கள் வசிக்கின்றனர். இவர்களுள் 19 ஆயிரத்து 532 பேர் கத்தோலிக்கராவர். தமிழ் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டுள்ள இம் மறைமாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் புதிய ஆயர் தமிழ் பேசத் தெரிந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

### இறைவழிபாடுமற்றும் திருவருட்சாதனங் களுக்கான திருப்பேராயத்தின் புதிய செயலாளராக ஆயர் மல்கம் ரஞ்சித்

திருத்தந்தை 16ம் பெனடிக் அவர்கள் 'இறை வழிபாடு மற்றும் திருவருட்சாதனங்களுக்கான திருப் பேராயத்தின் புதிய செயலராக ஆயர் மல்கம் ரஞ்சித்தை நியமித்துள்ளார்.'

இவர் 1957ம் ஆண்டு குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டு 1991ம் ஆண்டு கொழும்பு மறைமாவ ட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்றார். 1995ம் ஆண்டு இரத்தினபுரி மறை. மாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்ற இவர் 2001ம் ஆண்டு மக்களுக்கான மறைபரப்புத் திருப்பேராயத்தின் இணைச் செயலாளராக நியமனம் பெற்றார். 2004ல் இந்தோனேசியா மற்றும் கிழக்குத் திமோர் நாடுகளுக்கான திருத்தந்தையின் தூதுவராக நியமனம் பெற்ற இவர், மீண்டும் 2005 நவம்பர் மாதம் திருவழிபாட்டுத் திருப்பேராயத்தின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செயல்முறை விசுவாசம்

**ஆபிரகாமின் விசுவாசம்:-**

+ உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டுக்குச் செல். ஆபிரகாம் சிக்கல் மிகுந்த ஓர் உலகின் ஆரம்பமாவார். இறைத்தந்தை தனது திட்டத்தை ஆபிரகாம் மூலம் நிறைவேற்றினார். ஆபிரகாமுக்குக் கிடைத்த கட்டளை மிகக் கடினமான தாகும். ஆயினும் ஆபிரகாம் அதற்குக் கீழ்ப்படிந்தார்.
+ வளமான நாடு, மிகப் பெரும் இனசனம், பல்வேறுபட்ட ஆசீர்வாதம் இவற்றை வழங்குவதாக இறைவன் வாக்களித்தார். இதற்குடன்பட்டுச் சென்றார். அவரால் புரிந்து கொள்ள முடியாத இறைத்திட்டம் அவருக்கு வெளியிடப்பட்டது. கானானுக்கு வந்த அவர், வளம் நிறைந்த பகுதியை லோத்திற்குக் கொடுத்தார். எனவே, இறைவன் அவரது சந்ததிக்குப் பலஸ்தீன நாட்டையே கொடுத்தார்.
  **தொடக்க நூல் 13:14-16)**
+ தனது மருமகனான லோத்தை எதிரிகளிடமிருந்து காத்தார்.
+ மெல்கிசெதேக் எனும் குருவானவரால் ஜெருசலேமில் ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டார்.
  **- தொடக்க நூல் 14:19-20**
+ ஈசாக் பிறந்தார்.
+ மத்திய கிழக்கு நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உடன்படிக்கைச் சம்பிரதாயம் மிருகங்களை இருபிரிவுகளாக்கி அவற்றின் நடுவே நடந்து செல்லலாகும். அவ்வாறே உடன்படிக்கை செய்யப்பட்டு மீண்டும் மீண்டும் புதுப்பிக்கவும் பட்டது.
+ இறை-மனித உடன்படிக்கையை இறைவன் புதுப்பித்து விருத்த சேதனத்தை அதற்கடையாளமாக வழங்கினார். **தொடக்கநூல் 17:9-14**
+ ஆபிரகாம் முழுமையான விசுவாசங் கொண்டவர். அது செயற்படும் விசுவாசமாக இருந்தது. அன்பால் அழைத்த இறைவனுக்குத் தாமும் பிரதியன்பு காட்டினார்..

**செயற்படும் விசுவாசத்தின் எடுத்துக்காட்டு:**

+ உலகில் வாழும் எவருக்குமே விசுவாசம் அவசியமானது. இந்த விசுவாசம் தூயாவியாரின் கொடையாகும். "நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வடைவர்"
  **கலாத்தியர் 3:11.**
+ விசுவாசத்தின் மூலம் மனிதன் இறைவனை அனுபவிக்கிறான். விசுவாசம் என்பது "கண்ணுக்குப் புலப்படாதவைபற்றிய ஐயமற்ற நிலை" **எபிரேயர் 11:1**
+ விசுவாசத்தின் உன்னத எடுத்துக்காட்டு கிறிஸ்து ஆவார். புயலுக்குப்பயந்து, குரல் எழுப்பிய சீடரிடம் "நம்பிக்கை குன்றியவர்களே ஏன் அஞ்சுகிறீர்கள்" என இயேசு கேட்டு ஒரு சொல்லால் கடலை அமைதியடையச் செய்தார். அவரது விசுவாசத்தினளவு இதன் மூலம் தெரிகிறது. **மத்தேயு 8:23-27.**
+ இயேசு பார்வை கொடுத்த பிறவிக்குருடனைத் தொழுகைக்கூடத்திலிருந்து துரத்திவிட்டமை பற்றியறிந்த இயேசு, அவனைக்கண்ட போது "மானிடம் மகனிடம் நீர் நம்பிக்கை கொள்கிறீரா?" என்று கேட்டார். அவன் "அவர் யார்? சொல்லும். நம்பிக்கை கொள்வேன்" என்றான். இயேசு அவனிடம் "நீர் அவரைப் பார்த்திருக்கிறீர். உம்மோடு பேசிக்கொண்டிருப்பவரே அவர்" என்றார். அவர் "ஆண்டவரே நம்பிக்கை கொள்கிறேன்" என்றான்.
  **யோவான் 9:35-38.**
+ விசுவாசத்தின் காரணமாகவே இறை-மனித உறவை நம்மால் கட்டியெழுப்பமுடிகிறது; மீட்படையமுடிகிறது. எனவே, நாம் விசுவாசத்துடன் கிறிஸ்துவுக்குள் இறைவனுக்காக வாழ்வோம்.

**விசுவாசம் பற்றிய பரிசுத்த திருச்சபையின் படிப்பினை.**

+ இயேசுவின் பணி திருத்தூதர்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. புனித பேதுருவின் பிரசங்கங்கள், புதுமைகள் இதற்குச்சான்று பகருகின்றன.
+ ஒருநாள் திருத்தூதர்களான புனித பேதுருவும், புனித யோவானும் கோவிலுக்குச் சென்றனர். பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த பிச்சைக்காரனைக் குணப்படுத்தினர். புனித பேதுரு மக்களிடம் "இயேசுவின் பெயரே இவருக்கு வலுவூட்டியது." அவர் பெயர் மீது கொண்டிருந்த நம்பிக்கையால்தான் இது நடந்தது. இந்த நம்பிக்கையே உங்கள் அனைவர் முன்பாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு முழுமையான உடல் நலனைக் கொடுத்துள்ளது. என்று கூறினார்.

**திருத்தூதர் பணிகள்:-3:16**

+ இச்சம்பவத்தைப் பொறுக்கமுடியாத தலைவர்கள் திருத்தூதர்களைச் சிறையிலிட்டனர். ஆயினும், வியக்கத்தக்க வகையில் விடுதலையாகி மீண்டும் விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்தனர்.

+ பெந்தகோஸ்தே தினமே திருச்சபை உலகுக்கு வெளிப்படுத்தப்பட்ட தினமாகக் கருதப்படுகிறது. தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட சீடர் கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சாட்சி பகர்ந்தனர். "கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச்செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்" **திருத்தூதர் பணிகள்:-2:32**

+ அவர்கள் பலபாகங்களிலும் நற்செய்தியை அறிவித்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் விசுவாசத்துடன் திருமுழுக்குப் பெற்றனர்.

+ கலாபனைக் காலங்களில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் விசுவாசத்துடன் உயிர்த்தியாகம் செய்தனர்.

+ பல்வேறு காலகட்டங்களில் கருத்துப் பேதங்கள், கலவரங்கள், புரட்சிகளின் மத்தியிலும் பரிசுத்த திருச்சபை தூயாவியின் வல்லமையோடு தன் விசுவாச சத்தியங்களைப் பாதுகாத்து முன்னோக்கிச் சென்றது.

+ அந்த விசுவாசத்திற்கு இன்றைய திருச்சபை சான்றுபகருகிறது. விசுவாசத்தின் உதவியுடன் விசுவாசிகளை நீதிமான்களாக வழிநடத்துகிறது.

+ திருச்சபையில் நாமனைவரும் விசுவாசத்துடன் ஒருமனப்பட்டுள்ளோம். திருவருட்சாதனங்கள் வழியாக எமக்கு இறைவாழ்வு கிடைக்கிறது.

+ இறைவனை அறிமுகம்செய்து விசுவாசத்தினூடாக மனித வாழ்வின் உண்மைத்தன்மை பற்றி விளக்கமளிப்பது திருச்சபை.

+ இன்றைய சமூகத்தில். விசுவாசிகளின் வாழ்வின்-சாட்சியங்களின் மூலம் திருச்சபை தன்னை வெளிப்படுத்துகிறது.

+ பொதுவழிபாடு, பக்திமுயற்சிகள், செபவாழ்வு, புனிதர் பக்தி என்பவற்றின் மூலம் சமூகத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நேர்மை, நீதிக்கு விசுவாசத்துடன் சாட்சிபகரத் திருச்சபை வழி காட்டிப் பக்க பலமாக நிற்கிறது.

+ அடிப்படைவாதிகளின் படிப்பினைகளுக்கும், விசுவாசத்துக்கும் விரோதமான அரசியல் கருத்துகளுக்கும், காலத்தோடொத்த பிரச்சினைகளுக்கும் விசுவாசத்துடன் பதிலளிக்கத் திருச்சபை எம்மைத் தூண்டுகிறது.

**விசுவாசமற்ற உலகுக்கு விசுவாசம்:-**

+ இயற்கையின் ஊற்று, அதனைப்படைத்தவர் இறைவன். இயற்கைநியதிக்குள் அவரை உட்படுத்த முடியாது. மனிதனது எல்லைக்குட்பட்ட அறிவால் அவரை விளக்கமுடியாது. எமது கண்களால் காணவும் முடியாது. உலகை யாராய்வது போல உருவமற்ற ஆன்மாவான இறைவனைப்பற்றியாராய முடியாது

**யோவான் 4:22**

+ நாம் கடவுளின் பிள்ளைகளாக இருப்பதனால், மனித கற்பனையாலும், சிற்பவேலைத்திறமையாலும் உருவாக்கப்பட்ட பொன், வெள்ளி, கல் உருவங்களைப் போல கடவுள் இருப்பாரென நாம் எண்ணுவது முறையாகாது.

**திருத்தூதர் பணிகள் 17:29**

+ இறைவனை நாம் விசுவாசக் கண்ணாலும், சொந்த அனுபவத்தின் மூலமாகவுமே காண முடியும்.

+ இறைவன் தொடர்பாக மனிதனுக்குக் கிடைத்துள்ள மன உறுதியுள்ள வெளியடையாள சாட்சி உயிர்த்த கிறிஸ்துவே ஆவார்.

+ அவரை அறிந்து, விசுவசித்து அவர் மூலமாக இறைவனையறிந்து கொள்ளத் திருச்சபை அழைப்பு விடுக்கிறது.

**-மெற்றில்டா-**

## வத்திக்கான் அருங்காட்சியகம் 500வது ஆண்டு நிறைவு

உலகில் மிகவும் பிரபல்யமான அருங்காட்சியகங்களில் ஒன்றான வத்திக்கான் அருங்காட்சியகம் இவ்வாண்டு தனது 500வது ஆண்டு நிறைவைக் காண்கிறது.

1506ம் ஆண்டு ஜெனவரி 14ம் திகதி திருத்தந்தை 2ம் ஜூலியஸ் அவர்களினால் இவ்வருங்காட்சியகம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. வத்திக்கானில் திருத்தந்தையின் இல்லம் அமைந்துள்ள வளாகத்திலேயே இந்த அருங்காட்சியகமும் அமைந்துள்ளது.

இதன் 500வது ஆண்டு நிறைவை ஒட்டி பல நிகழ்வுகள் இந்த ஆண்டு முழுவதும் நடைபெறுமெனவும், இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள சிறப்புக் கண்காட்சியோடும் சர்வதேச மாநாட்டோடும் நிகழ்வுகள் நிறைவு பெறுமெனவும் வத்திக்கான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**R. ஸ்ரான்லி பிரபாகரன்**

## பிள்ளைகளின் வளர்ச்சியும் விருத்தியும் (Growth and Dvelopment of Children)

மனித வாழ்வில் அவனது ஆரம்பப்பருவம் மிகவும் முக்கியமானதாகும். ஒரு மனிதன் குழந்தையாக அல்லது பிள்ளையாக இருக்கின்ற போது அந்தப்பருவம் அன்றாடம் பல முக்கிய மாற்றங்களைக் கொண்டுவரும் பருவமாக இனங்காணப்படுகின்றது. உடலில் வளர்ச்சியும், மாற்றமும், மனதில் வளர்ச்சியும், மாற்றமும், சமூகப் பங்கேற்பில் வளர்ச்சியும், மாற்றமும் எனப் பலவகையான முன்னேற்றங்களை ஒரு பிள்ளை அன்றாடம் பெற்று வருகின்றது. ஒரு குழந்தையிடம் இடம் பெறுகின்ற இத்தகைய வளர்ச்சியும், மாற்றமும் அக்குழந்தைக்கு நன்மையோ தீமையோவாவது பிள்ளையின் அந்த வளர்ச்சி, மாற்றத்திற்கான காரணிகளின் தன்மையைப் பொறுத்தே அமைகின்றது. எனவே, ஒரு பிள்ளையின் வளர்ச்சியிலும், விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை நாம் அறிந்து கொள்வதன் மூலம் பிள்ளையின் சீரான வளர்ச்சிக்கும், விருத்திக்கும் எம்மால் இயன்ற பங்கை அளிக்க முடியும்.

### ➩ வளர்ச்சி

வளர்ச்சி என்பது உடலில் இயற்கையாக ஏற்படும் மாற்றங்களினால் உண்டாகும் நிறை, உயரம், பருமன் என்பவற்றின் அதிகரிப்பு ஆகும். வளர்ச்சியை அளவிட முடியும். (கிலோ கிராம், அடி, சென்ரிமீற்றர், இறாத்தல்)

### ➩ விருத்தி

விருத்தி என்பது ஒழுங்கு முறையான தொடர் நிகழ்ச்சியாகும். இது தலையிலிருந்து கால் நோக்கி நடைபெறும். இது மனித வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்பு வரை நடைபெறும். விருத்தி என்பது அனுபவத்தினாலும், முதிர்ச்சியினாலும் இடம் பெறும். ஒரு பிள்ளையில் இடம் பெறுகின்ற முதிர்ச்சிக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப நடத்தை மாற்றங்கள் வேறுபடலாம். வளர்ச்சியும், விருத்தியும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்துள்ளன.

### ➩ முதிர்ச்சி

முதிர்ச்சி என்பது வயதுடன் ஒத்த விருத்தியாகும்; நடத்தை மாற்றம் ஆகும். அதாவது, குறித்த வேலைகளைச் செய்வதற்கு ஆயத்தமான நிலை எனலாம். உ+ம் பேசும் ஆற்றல் வயதுடன் ஒத்து வளர்ச்சியடைதல்.

முதிர்ச்சியானது மனிதனின் அகஞ்சுரப்பிகள், மத்திய நரம்புத்தொகுதி, தசைத் தொகுதி மற்றும் ஏனைய தொழிற்பாடுகளில் தங்கியுள்ளது.

### ➩ அனுபவம்

மனித வாழ்வின் ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் ஏற்படும் நிகழ்வுகள், நாம் அறிவது, நமக்கு நேர்வது அனைத்தும் எமது அனுபவமாக மாறுகின்றது. ஒவ்வொரு வளர்ச்சிக்கட்டத்திலும் இது மிகவும் முக்கியமானது. இது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் உதவுவதுடன், மனிதன் தான் வாழும் சுற்றாடலுக்குத் தன்னை சீராக்கிக் கொள்ளக்கூடியவனாகவும் மாற்றுகின்றது.

**வளர்ச்சியிலும் விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்:**

* பரம்பரை
* சூழல்

### ➩ பரம்பரையும் சூழலும்

அநேகமாக எல்லா உயிர்களுமே கருப்பையில் இருக்கும் போது ஒரே குணாதிசயங்களைக் கொண்டதாகக் காணப்படும். பூமியில் பிறந்து வளர்ச்சியடையும் போது வேறுபாடுகள் தோன்றத் தொடங்குகிறது. இவ்வாறு தனி வேறுபாடு தோன்றுவதற்குக் காரணம் பரம்பரை அலகுகளா, சூழல் காரணிகளா என உளவியலாளர்கள் ஆராய்ந்தனர். பரம்பரை இயல்புகளும், சூழல் காரணிகளும் இணைந்தே உயிரினங்களின் உடல், உள வளர்ச்சியை நிர்ணயிக்கிறன என்ற முடிவுக்கு வந்தனர். கரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகும் போதே பரம்பரை இயல்புகள் நிர்ணயிக் கப்படுகின்றன. கரு உருவாகும் போது கருப்பை யிலுள்ள சூழலில் உருவாகும் வாழ்க்கை பின்னர், குடும்பம், உற்றார், உறவினர், பாடசாலை, கோயில், சமூகம் போன்ற சிக்கலான சூழலாக விருத்தி யடைகிறது. பரம்பரை இயல்பானது ஆரம்பத்தில் ஒரு நிலையான காரணியாக இருந்து வளர்ச்சியின் போது வெவ்வேறு சூழல் காரணிகளால் மாறுபடுகிறது.

### பரம்பரை

உயிரினங்களின் குணாதிசயங்களையும், உடலமைப்பையும், ஆற்றல்களையும், பரம்பரை பரம்பரையாக எடுத்துச் செல்லும் காரணி கருவுருப் பொருளிலமைந்துள்ள நிற மூர்த்தங்களிலுள்ள (Chromosomes) பரம்பரை அலகுகள் (Genes) ஆகும். மனித கலத்தில் 46 நிறமூர்த்தங்கள் உள்ளன. ஒவ்வொரு நிறமூர்த்தமும் பல நூற்றுக்கணக்கான பரம்பரை அலகுகளைக் கொண்டுள்ளன. ஒரு பெண்ணின் சூலும், ஓர் ஆணின் விந்தும் ஒன்று சேர்ந்து கரு உருவாகும் போதே மனித வாழ்க்கையும் ஆரம்ப மாகிறது. கருக்கட்டல் நிகழும் போது தாயிடமிருந்து 23 நிறமூர்த்தங்களும் தந்தையிடமிருந்து 23 நிறமூர்த்தங்களும் பெறப்பட்டு இவை சேரும் போது 46 நிறமூர்த்தங்களாகத் தொடர்ந்து பேணப்படுகின்றன. நிறமூர்த்தங்களிலுள்ள பரம்பரை அலகுகள் பெற்றோரி லிருந்து பிள்ளைகளுக்கும், பிள்ளைகளிலிருந்து அவர்களது வழித்தோன்றல்களிற்கும் கடத்தப் படுகின்றது. உ+ம்- ஒருவரின் அழகு, நிறம், நுண் மதி, உடலமைப்பு, குணாதிசயங்கள், சில நோய்கள் பரம்பரையாக ஒருவருக்குக் கிடைக்கப்படுகின்றது.

### சூழல்

ஒருவரது வளர்ச்சியையும் நடத்தையையும் நிர்ணயிக்கின்ற, அவருக்குப் புறம்பே இருந்து கட்டுப்படுத்தும் உயிருள்ள, உயிரற்ற ஏதுக்கள் யாவும் சூழல் எனப்படும்.

ஒருவரது உற்பத்தியின் போதே அவரது வளர்ச்சி, விருத்தி நிர்ணயிக்கப்பட்ட போதும் சுற்றா டல் காரணிகளால் மாற்றங்கள் ஏற்படலாம். தனியார் வேறுபாடுகள், பழக்க வழக்கங்கள் சூழலினால் மாற்றியமைக்கப்படுகிறன.

சூழல் இரண்டு வகைப்படும்.

1. உட்சுற்றாடல்
2. வெளிச் சுற்றாடல்

### உட்சுற்றாடல் (Internal Environment)

மனித உடலிலுள்ள எல்லாக் கலங்களும் உட்சுற்றாடலை பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உடலானது வெவ்வேறு வெளிச்சுற்றா டலுக்கேற்ப உட் சுற்றாடலை சீர்ப்படுத்தும் தன்மை "ஒரு சீர்த்திட நிலை" (Homeostasis) எனப்படும். உ+ம்:- உடல் வெப்பநிலை, திரவ அளவு, அமில காரத்தன்மை, ஓமோன்களின் சமநிலை.

### வெளிச்சுற்றாடல்

வெளிச்சுற்றாடலைப் பின்வருமாறு வகுக்கலாம்.

1. பௌதீகம் அல்லது உடல் சார்ந்தது.
2. உளம் சார்ந்தது.
3. சமூகம் சார்ந்தது.

இம்மூன்று வெளிச்சுற்றாடலும் மனித வாழ்க்கையின் கரு உற்பத்தியின் போதே மாற்றங் களை ஏற்படுத்தும்.

தாயின் கருப்பையில் முதிர்மூலவுரு வளரும் சூழல் தொடக்கம் "பிறப்பிற்கு முன் உள்ள சூழ்நிலை" (Prenatal environment), "பிறக்கும் போது உள்ள சூழ் நிலை" (Natal environment), "சிசு பிறந்தபின் உள்ள சூழ்நிலை" (Post natal environment) ஆகிய மூன்று காலப்பகுதியிலும் உடல், உள, சமூக சுற்றாடல்கள் மனித வளர்ச்சி, விருத்தியில் பங்கு வகிக்கின்றன.

பிறக்குமுன் முதிர் மூலவுருவின் வளர்ச்சியையும், விருத்தியையும் பாதிக்கும் காரணிகள்

- தாயின் போசாக்கின்மை
- தாயில் ஏற்படும் தொற்றுக்கள், உ+ம் எயிட்ஸ், றுபெல்ல.
- தாயில் ஏற்படும் நோய்கள் உ+ம் குருதியமுக்கம்.
- ஓமோன் குறைபாடு உ+ம் தையிரோயிட் ஓமோன்
- தாயின் கருப்பையின் அமைப்பு.
- தாய்க்கு ஏற்படும், விபத்துக்கள், ஆபத்துக்கள்.
- மருந்துகள், கதிர்வீசுக்கள்.
- தீய பழக்கங்கள் உ+ம் புகைப்பிடித்தல், போதை வஸ்துக்கள், மதுவுக்கு அடிமையாகுதல்.

### உளச்சுற்றாடல்

தாயின் கருப்பையில் உண்டாகும் குழந் தை பெற்றோருக்கு வேண்டப்பட்ட குழந்தையாக, மகிழ்சியுடன் வரவேற்கப்பட்ட குழந்தையாக இருக்கும்போது அக் குழந்தை உடல், உளவளர்ச்சி விருத்தியடைந்த குழந்தையாக உருவாகும். தாய்க்குக் கிடைக்கும் ஓய்வு, உறக்கம், மனநிம்மதி, அழகான சுற்றாடல், மகிழ்ச்சியான குடும்பம் கருப்பையில் உருவாகும் குழந்தையின் வளர்ச்சிக்கு முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பையில் வேண்டப்படாத குழந்தை நாட்டுக்கே வேண்டப்படாத பிரஜையாக உருவாகலாம். திருமணம் ஆகாத பெண் கருவுறல், பொருளாதாரக் கஷ்டம், ஒத்துழைப்பில்லாத, மதுவுக்கு அடியான கணவன்மார், அதிக பிள்ளைகள், உள நோயால் பாதிக்கப்படும் தாய் போன்ற சந்தர்ப்பங்களில் உருவாகும் குழந்தைகளின் வளர்ச்சியும் விருத்தியும் பாதிக்கப்படுகின்றது.

### பிறக்கும்போது இருக்கும் உடலியல் சார் சூழல்

கருப்பையில் வாழும் காலத்தில் உணவு, சுவாசம், கழிவகற்றல் போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் தாயில் தங்கியிருந்த முதிர் மூலவுரு, குழந்தையாக பூமியில் உதிக்கும் போது தாயின் ஒடுங்கிய பிறப்புக்கால்வாயினூடாக வர பல கஷ்டங்களை எதிர் நோக்குகிறது. தானாகவே கஷ்டப்பட்டு சுவாசிக்க வேண்டிய நிலை, தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்க வேண்டிய நிலை போன்ற சவால்களுக்குத் தள்ளப்படுகின்றது. இவைகளை வெற்றிகரமாகவும், ஆரோக்கியமாகவும் கையாளும் போது குழந்தையின் வளர்ச்சியும், விருத்தியும் மேலும் விரிவடைகின்றன.

### பிறக்கும்போது இருக்கும் உளச் சுற்றாடல்

குழந்தையின் உள்ளம் மிக மென்மையானது. சிறிய வெளிக் காரணிகள் கூட உள்ளத்தை தாக்கலாம். பிரசவத்தை நடத்துவோர் குழந்தையைப் பூப்போல கையாள வேண்டும். தாயின் அன்பு, அரவணைப்பு, பாசம், உடற்சூடு குழந்தைக்கு உளத்திருப்தியைக் கொடுப்பதுடன், பாதுகாப்பான உணர்வையும் கொடுக்கும். குடும்ப அங்கத்தவர் அனைவரும் குழந்தையை இன்முகத்துடன் வரவேற்கும் ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்.

### பிறந்த பின் இருக்கும் உடலியல் சார் சூழல்

குழந்தை பிறந்த பின்பு படிப்படியாக தாயின் சூட்டிலிருந்து விடுபட்டு சுற்றுப்புற சூழல், காலநிலைக்கும் தன்னைப் பொருத்தப்பாடு செய்து கொள்ள கற்றுக்கொள்ளுகின்றது. இந்நேரத்தில் போதிய அளவு சுத்தமான காற்றோட்டம், அளவான வெப்பநிலை, தாய்ப்பால் போன்றவை எவ்வித தடையுமின்றி கிடைக்கப்பெறும் போது ஆரோக்கிய மான குழந்தையாக வளர்கின்றது.

### பிறந்த பின் இருக்கும் உளச்சுற்றாடல்

ஒரு குழந்தை பிறந்த பின்பு, குழந்தையின் தாயும், குடும்ப அங்கத்தவர்களும் குழந்தையை முழு மனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அதன் வளர்ச்சியில் மிக முக்கியமானதாகும். ஏற்றுக்கொள்ளப்படாத நிலையானது குழந்தையின் வளர்ச்சியையும், விருத்தியையும், பெருமளவிற்கு பாதிக்கும். குறுகிய இடைவெளிகளில் அதிக பிள்ளைகள், பொருளாதார நிலை, குடும்ப அங்கத்தவர்களின் மனப்பாங்கு, பழக்க வழக்கங்கள் குழந்தைக்குத் தகுந்த வரவேற்புக் கொடுக்க முடியாததற்கு காரணிகளாக அமைகின்றன. குழந்தை எவ்வளவு சிறிய பருவமாயிருந்தாலும், அதன் சுற்றாடலில் இருக்கும் பிரச்சனைக்குரிய நிலையை, அன்பற்ற நிலையை உணரக்கூடியதாக இருக்கும். சிறு பாரயத்தில், தாயினால் அதன் முழுத் தேவைகளும் பூர்த்தியாக்கப்படுவதனாலும், கூடிய நேரம் தாய் குழந்தையுடன் இருப்பதனாலும், அது தாயின் அன்பை கூடியளவு பெறுவதாலும் நன்மை அடைகின்றது. அது கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் அதிக அளவு பாதிப்பு நிலையும் ஏற்படுகின்றது.

### பிறந்த பின் காணப்படும் சமூக சுற்றாடல் நிலை

குழந்தை தனது சுற்றாடலிருந்து எல்லாவற்றையும் கற்றுக் கொள்கிறது. சமூக மயமாக்கலின் முதல் படி குழந்தையின் குடும்பம் ஆகும். குடும்பத்தில் ஆரம்பித்து பின்னர் விளையாட்டுக் குழு, அண்டை அயலவர்கள், பாடசாலை, கோயில் போன்றவற்றில் தொடர்கிறது. குழந்தை தனது இன, மத, கலாசாரங்களை, சமூக விதிகளை, பழக்க வழக்கங்களை, ஒழுங்கு நடை முறைகளை சமூக சூழலிருந்து கற்றுக்கொள்வதுடன் அதைத் தொடர்ச்சியாகக் கையாளவும் எத்தனிக்கின்றது. ஒரு சமூதாயத்தில் வாழும் போது அதற்கேற்றபடி, உளச் சீராக்கம் செய்து கொள்வது மிக முக்கியமாகும்.

ஆகவே மேற்கூறப்பட்ட கருத்துக்களுக்கு அமைய, ஒரு குழந்தை தாயின் கருவில் உருவெடுத்த நாளிலிருந்து, அது கருப்பையிலே வளர்ந்து, இவ்வுலகிலே பிறந்து, இச் சமுதாயத்திலே வளர்ந்து, வாழும் காலம் முழுவதும், குழந்தைக்குக் கிடைத்த பரம்பரை, உடல், உள, சமூக சுற்றாடல், ஆதரவுகள், பராமரிப்புக்கள் எல்லாமே ஒன்று சேர்ந்து பிள்ளையின் வளர்ச்சியையும், விருத்தியையும் நிர்ணயிப்பது மட்டுமல்லாமல், அது உடல், உள, சமூக, ஆன்மீக ஆரோக்கியமுள்ள பிரஜையாக இவ்வுலகில் வாழவும் வழிவகுக்கின்றது.

அருட்சகோதரி யோசவ்வா யோசவ் M.Sc. (Nursing).
(திருச்சிலுவைக் கன்னியர் சபை)
சிரேஷ்ட விரிவுரையாளர் – தாதிய பட்டப்படிப்பு
கிழக்குப் பல்கலைக்கழகம் – மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு நினைவு நாள் நன்றிப்பலி

திருகோணமலையில் மிகவும் பழமை வாய்ந்த முதலாவது யாத்திரை ஸ்தலமாகிய பாலையூற்றில் லூர்த்து அன்னையின் திருச்சுருபம் ஸ்தாபிக்கப்பட்டு நூறு வருடங்கள் நிறைவு பெற்ற நன்நாளாகிய 19.02.2006 அன்று காலை 7.30 மணியளவில் அன்னையை மகிமைப்படுத்த பக்திப் பரவசமாய் ஒன்று கூடிய பங்குமக்களுடன் லூர்த்து கெபியின் பலி பீடத்தில் அருட்பணி. L.பிலிப், அருட்பணி. அல்பன் ராஜசிங்கம், அ.ம.தி. அருட்பணி பிறிட்டோ அலோசியஸ் அ.ம.தி. அருட்பணி சில்வெஸ்டர் அ.ம.தி., அருட்பணி பிறட்லி றொசாயிரோ, அ.ம.தி. ஆகியோர் புடைசூழ அருட்பணி. ஜீவன தாஸ் பெர்னாண்டோ அ.ம.தி. அடிகளாரின் தலைமையில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இறைவார்த்தையின் ஆண்டாக 2006ஆம் ஆண்டினை சிறப்பிக்குமாறு எமது மறைமாநில திருச்சபையினால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பிற்கேதுவாக பங்கின் எட்டு வட்டார மக்களினால் ஆயத்தப்படுத்திச் சிறப்பிக்கப்பட்ட நவநாட்களின் போது வழிபாடுகளில் இறைவார்த்தையினை முக்கியத்துவப்படுத்தி பங்குத்தந்தை, உதவிப்பங்குத்தந்தை மற்றும் அருட்பணி பிலிப், அருட்பணி. ஜெயராஜன் கூஞ்ஞே அ.ம.தி. ஆகியோரினால் திருவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

மேலும் அன்னையின் திருக்காட்சித் திருவிழா (11.02.2006) அன்று மாலையில் பங்கின் பிரதான பாதையூடாக அலங்கரிக்கப்பட்ட லூர்த்து அன்னையின் திருச்சுருபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பாலையூற்று மாதாவின் 100வது வருட ஜூபிலியின் மாபெரும் விழாவானது எதிர்வரும் வைகாசி மாதம் 28ம் நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது என்பதைனையும் அடியார்களுக்கு அறியத் தருவதில் மகிழ்வடைகின்றோம்.

தகவல்:. G. அல்பேட்

## விண்ணுலக வாழ்வில்

## 17ம் ஆண்டு நினைவு



குடும்பத்தின் ஒளி விளக்காய்
சமூகத்தின் அறிவொளியாய்
அன்பின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய் – வையகத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்து
வழிப்படுத்திய தெய்வமே
உங்கள் வழிகாட்டலைப் பின்பற்றும் நாம்
துயருடன் பிரார்த்திக்கின்றோம்

தோற்றம்
1926-01-13

மறைவு
1989-03-31

அன்புள்ள மனைவி,
மகன்மார், மகள்மார், மருமகள், பேரர்
மற்றும் உறவினர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு
மட்டும்
முடிவுத்திகதி
15 - 04 - 2006




# விவிலியம் கற்போம் - 46

**(விடுதலைப் பயணம் 24: 1-18)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் "ஆரோன், நாதாபு, அபிகூ ஆகியோருடனும், இஸ்ரயேலின் எழுபது பெரியோர்களுடனும் ஆண்டவரிடமாய் ஏறிவாருங்கள், தொலையில் நின்று ........................ கொள்ளுங்கள். மோசே மட்டும் ஆண்டவர் அருகில் வரலாம், ஏனையோர் அருகில் வரலாகாது, மக்கள் அவரோடு ........................ மேலேறி வரக்கூடாது" என்று கூறினார். எனவே, மோசே மக்களிடம் வந்து ஆண்டவர் சொன்ன அனைத்து வார்த்தைகளையும், விதிமுறைகளையும் அறிவித்தார். மக்கள் அனைவரும் ஒரேகுரலாக, "ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் நாங்கள் ........................" என்று விடையளித்தனர். மோசே ஆண்டவரின் வாக்குகள் அனைத்தையும் எழுதி வைத்தார். அதிகாலையில் அவர் எழுந்து மலையடிவாரத்தில் ஒரு பலி பீடத்தையும், இஸ்ரயேலின் ........................ குலங்களுக்காகப் பன்னிரண்டு தூண்களையும் எழுப்பினார். அவர் இஸ்ரயேல் மக்களின் இளைஞர்களை அனுப்பிவைக்க அவர்களும் ஆண்டவருக்கு எரிபலிகள் செலுத்தினர். மாடுகளை ........................ பலிகளாகவும் பலியிட்டனர். மோசே இரத்தத்தில் ஒருபாதியை எடுத்துக் கலங்களில் விட்டுவைத்தார். மறுபாதியை பலிபீடத்தின் மேல் தெளித்தார். அவர் ........................ ஏட்டைஎடுத்து மக்கள் காதுகளில் கேட்கும்படி வாசித்தார். அவர்கள் "ஆண்டவர் கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம்" என்றனர். அப்போது........................ இரத்தத்தை எடுத்து மக்கள் மேல் தெளித்து, "இவ்வனைத்து வார்த்தைக்குமிணங்க, ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் ........................ இதோ" என்றார். பின்னர் மோசே, ஆரோன், நாதாபு, அபிகூ ஆகியோரும் எழுபது பெரியோர்களும் மேலேறிச்சென்று, இஸ்ரயேலின் கடவுளைக் கண்டார்கள். அவர் பாதங்களின் கீழுள்ள தளம் ........................ இழைத்த வேலைப்பாடு போன்றும் தெள்ளிய வான்வெளி போன்றும் இருந்தது. ஆண்டவர் மோசேயை நோக்கி "என்னிடம் மலைமேல் ஏறிவந்து இங்கேயே இரு. அவர்களுக்குக் கற்பிக்க நான் எழுதியுள்ள சட்டதிட்டங்கள் அடங்கிய ........................உன்னிடம் அளிப்பேன்" என்றார். பின்னர் மோசே மலைமேல் ஏறிச்செல்ல ஒரு மேகம் மலையை மூடிற்று. ஏழாம் நாள் ஆண்டவர் மோசேயை அழைத்தார். மோசே ஏறிச்சென்றார். மலையில் நாற்பது பகலும் நாற்பது இரவும் தங்கியிருந்தார்.

**விடைகள்:- இரத்தம், கற்பலகைகளை, நீலமணிக்கல், தொழுது, செயல்படுத்துவோம், பன்னிரண்டு, மலை, நல்லுறவு, உடன்படிக்கையின், மோசே.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம்- 46

(சரியான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1) எட்டயபுரத்துப் புலவனின் மனைவியின் பெயர் இது
(கண்ணம்மா / பொன்னம்மா / செல்லம்மா)

2. சோழமன்னர்களின் ஆட்சி இலங்கையில் நிலவியகாலத்தில் 'ஜனநாதமங்களம்' என்று அழைக்கப்பட்ட இடம்.
(பொலன்நறுவை / அநுராதபுரம் / திருகோணமலை)

3. நால்வகைப் படைகளில் ஒன்றை இப்பெயராலும் குறிக்கலாம்
(யாளி / அஷ்வம் / மயூரம்)

4) தமிழில் காணப்படும் பௌத்த காப்பியங்களில் ஒன்று
(சிலப்பதிகாரம் / சீவகசிந்தாமணி / மணிமேகலை)

5) கூழுக்கும் ஆசை ...................... ஆசை
(காசுக்கும் / மீசைக்கும் / தோசைக்கும்)

6) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி........ என்னும் குறள் வரியில் காணப்படும் சீர்களின் எண்ணிக்கை.
(இரண்டு / மூன்று / நான்கு)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 46
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 44 விடைகள்

இரபிதீம், யாக்கோப்பின், வார்த்தை, சொத்தாவீர்கள், மோசே, ஆண்டவர், உன்னோடு, மக்களிடம், சீனாய் மலை, கொல்லப்படுவது.

## அறிவை வளர்ப்போம் - 44 விடைகள்

1) 5வது 2) கும்பகர்ணன் 3) 4க்கு 1
4) அக்குபங்சர் 5) காடுகொள்ளாது 7) சுக்ரோஸ்

**போட்டியின் இரண்டு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி இசை நாடா பரிசு பெறுவோர்.**

- மஹிந்தன் அழகுதுரை
  14/1A சின்ன உப்போடை வீதி
  மட்டக்களப்பு.
- ச.குலோத்துங்கன்
  80/2 நல்லையா வீதி
  மட்டக்களப்பு

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி ஐம்பது ரூபா பரிசு பெறுவோர்.**

- அஜித்தப் பிரியா இம்மானுவேல்
  38 பாக்கியம் வீதி
  பெரியஉப்போடை
  மட்டக்களப்பு.
- செரோலின் செலர்
  பிரதான வீதி
  ஏறாவூர்-4

**பாராட்டுப் பெறுவோர்**

- M. நலுக்ஷினி கொறேரா
  86/11, மின்சார நிலைய வீதி
  திருகோணமலை.
- அ. றே. சியாமினி
  98/3 நீதி மன்ற வீதி
  திருகோணமலை

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## ஏப்ரல் ~ 2006

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் - காலை 5.50 மணி**

நாள்: 01, 02, 03, 04 - பெஸ்லியோ வாஸ்
05, 06, 07 - போதகர் T.T. பிரான்சிஸ்
15, 16, 17, 18 - அருள்தந்தை இயூஜின் போல் ஜொனத்தன்
19, 20, 21 - மெற்றில்டா இராஜேந்திரம்

**புதிய உலகம் - (வளர்ந்தோர் நிகழ்ச்சி) - மாலை 6.30 மணி**

நாள்: 09 - 'துன்பம்' சித்திரம்
பிரதியாக்கம்: ஸ்ரான்லி பிரபாகரன்
26 - செய்திகள், போட்டி, உரை, பாடல்கள் உள்ளிட்ட சஞ்சிகை மலர்.

**புனிதவார சிறப்பு நிகழ்ச்சிகள்**

நாள்: 09 - **நேரம் மாலை 7.00 மணி**
குருத்து ஞாயிறு சிறப்பு மலர்
**சிறப்பிப்போர்:** தேவநாயகம் அலோசியஸ் குழுவினர்.

நாள்: 13 - **நேரம் மாலை 7.00 மணி**
புனித வியாழன் சிறப்பு மலர்
**சிறப்பிப்போர்:** சுமித்ரா குழுவினர் - திருகோணமலை

நாள்: 14 - **இரவு 10.15 மணி**
புனித வெள்ளி சிறப்பு மலர்
**சிறப்பிப்போர்:** ஸ்ரான்லி பிரபாகரன் குழுவினர்.

நாள்: 15 - **மாலை 7.00 மணி**
புனித சனி சிறப்பு மலர்
**சிறப்பிப்போர்:** சுமித்ரா குழுவினர் - திருகோணமலை

நாள்: 16 - **இரவு 10.15 மணி**
உயிர்ப்பு விழாச் சிறப்பு மலர்
**சிறப்பிப்போர்:** அருட்தந்தை A. தேவதாசன் குழுவினர்

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொகுப்பு : சமூகத்தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org